திருவள்ளுவர் ஆண்டு 2036

# செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி : 99 பகுதி : 4 ஏப்ரல் 2005

மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.

ஏப்ரல்–

## தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் திரு. நா.குமரன் சேதுபதி | தலைவர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | துணைத்தலைவர் |
| திரு. இரா. அழகுமலை | செயலாளர் |
| திரு. மா. சங்கரபாண்டியன் | உறுப்பினர் |
| திரு. டாக்டர் ந.சேதுராமன் | உறுப்பினர் |
| திரு. எம்.பி.ஆர்.மலையாண்டி என்ற அசோக் | உறுப்பினர் |
| திரு. ச.பரங்குன்றம் | உறுப்பினர் |
| திரு. வே.திருவரங்கராசன் | உறுப்பினர் |
| திரு. இரா.குருசாமி | உறுப்பினர் |
| திரு. க.முத்தையா பசும்பொன் | உறுப்பினர் |
| திரு. இரா.கண்ணன் | உறுப்பினர் |
| திரு. மா.ச. கார்த்திகேய பாலாஜி | உறுப்பினர் |

## கல்லூரிக் குழு

| | |
|---|---|
| டாக்டர் ந.சேதுராமன், M.S.,M.Ch.(URO).,M.N.M.S.(URO).,FICS., | தலைவர் |
| திரு. மா. சங்கரபாண்டியன், பி.ஏ.பி.எல்., | செயலாளர் |
| திரு. இரா. அழகுமலை, எம்.ஏ., எம்.ஃபில்., | உறுப்பினர் |
| திரு. இராணி இலட்சுமி நாச்சியார் | உறுப்பினர் |
| திரு. எம்.பி.ஆர்.மலையாண்டி என்ற அசோக், பி.எல்., | உறுப்பினர் |
| திரு. எஸ்.பரங்குன்றம், பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. இரா.குருசாமி, பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. மா.ச.கார்த்திகேய பாலாஜி, | உறுப்பினர் |
| திரு. க.முத்தையா பசும்பொன் | உறுப்பினர் |
| டாக்டர் திரு. நா.பாலுசாமி, எம்.ஏ.,பி.எல்.,எம்.லிட்.பி.எச்.டி., | உறுப்பினர் |
| திருமதி. வாசுகி இராஜா, எம்.எஸ்.சி., எம்ஃபில்., | உறுப்பினர் |
| டாக்டர் திரு.க.சின்னப்பா, எம்.ஏ., பி.எச்.டி., | உறுப்பினர் |
| பல்கலைக்கழக உறுப்பினர் | |

# செந்தமிழ்

(தோற்றம் 1903)

தொகுதி : 100
பகுதி : 4
ஏப்ரல் 2005

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு 2036

வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867 - 02.12.1911

மதுரைத் தமிழ்ச்சங்கம் ★ 14-09-1901 ★ THE MADURAI TAMIL SANGAM

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 60 | ரூ. 600 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | ரூ. |

ஆசிரியர் இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர் – மதுரைத் தமிழ்ச்சங்கம்.

பதிப்பாசிரியர் இரா. சதாசிவம் எம்.ஏ., எம்.ஃபில்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.

# பொருளடக்கம்

**இதழ்மணம்** 93

**எழுத்தியல் ஆய்வு மரபுகள்** 94

பேராசிரியர் முனைவர். இரா.கோதண்டராமன்

**உ.வே.சா.வும் குமரகுருபரர் படைப்புக்களும்** 112

பேராசிரியர் முனைவர். பெ.சுயம்பு

**சிலம்பில் இயற்கை** 130

பேராசிரியர் முனைவர் கதிர்மகாதேவன்

# இதழ் மணம்

இவ்விதழில் பேராசிரியர் முனைவர். இரா. கோதண்டராமன் அவர்களுடைய "எழுத்தியல் ஆய்வு மரபுகள்" என்னும் கட்டுரை வெளிவருகிறது. தொல்காப்பியர் முதலான இலக்கணிகளின் மரபிலக்கணங்கள் புறநிறைவுக் கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு வகுக்கப்பட்டன இத்தகைய இலக்கணங்கள் மொழியின் இயல்பான அடிநிலை அமைப்புகளைக் கருத்தில் கொள்ளாமல் பொருத்தமற்ற செயற்கையான ஆய்வினை முன்மொழிந்து புறநிலை வடிவங்களை வருவிக்க முற்படுகின்றன. தொல்காப்பியர் தனது ஆய்வு உத்திகளை மாற்றியமைத்துக் கொள்ள வாய்ப்பிருந்தும் அதனை நழுவ விட்டுவிட்டார். தொல்காப்பிய எழுத்தியல் ஆய்வானது அகநிறைவுக் கோட்பாட்டின் அடிப்படையில் மறுபரிசீலனைக்கு உரியதாகின்றது. தொல்காப்பிய ஆய்வுக்கு ஒருமாற்று ஆய்வை முன்மொழிவதற்கான வாய்ப்புள்ளது என்னும் பேராசிரியரின் கருத்து மொழித்துறை அறிஞர்கள் ஆய்வுக்களங்களில் முறையாகச் சிந்திக்க வேண்டிய செய்தியாகும்.

அடுத்துப் பேராசிரியர் பெ. சுயம்பு இவ்வாண்டு மதுரைத் தமிழ்ச்சங்கத்தில், "உ.வே.சா.வும் குமரகுருபரர் படைப்புக்களும்" என்னும் தலைப்பில் ஆற்றிய அறக்கட்டளைச் சொற்பொழிவு இடம்பெறுகிறது. கல்வி வளர்ச்சி கருதி வகுப்பறைகளுக்கு அப்பால் சிந்திக்க வேண்டிய ஆய்வு அரங்கமாக அறக்கட்டளைச் சொற்பொழிவு அமைந்து அவை கட்டுரை வடிவம் பெறுவது மாண்புடையதாகும். பேராசிரியர் எழுத்தெண்ணிச் சிந்தித்துச் சொற்பொழிவைக் கட்டுரை வடிவில் அளித்திருப்பது அரிதே பூத்த குறிஞ்சி மலர் போல உள்ளது.

பேராசிரியர் கதிர்மகாதேவன் அவர்களுடைய "சிலம்பில் இயற்கை" என்னும் கட்டுரை இடம் பெறுகிறது. இயற்கை வருணனை இயற்கை அழகைப்பாடுவதையே நோக்கமாகக் கொண்டதல்ல காப்பிய நிகழ்ச்சிகளில் ஊடாடும் மாந்தரின் உணர்ச்சி மெய்ப்பாடுகளை உள்ளுறுத்தி சிலேடையாகக் காட்டும் உத்தியை சிலம்பு படைத்திருப்பதைப் பேராசிரியர் நிலம்தோறும் காட்சிதோறும் எடுத்துக்காட்டியுள்ள பாங்கு இன்புறத்தக்கது. காலமும் இடமும் நாடகத்தின் ஒருமைப்பாட்டிற்கு இன்றியமையாது இருப்பதை நுண்ணிதின் எடுத்துக்காட்டியுள்ள பாங்கு இன்புறத்தக்கது.

# எழுத்தியல் ஆய்வு மரபுகள்

இரா.கோதண்டராமன்
தொல்காப்பியர் அடிப்படை ஆய்வு மையம்
புதுச்சேரி

## 1.0. புரிதலும் தெரிதலும் ஒன்றல்ல

1.1 ஒன்றைப் புரிந்துகொள்வது என்பதும் தெரிந்துகொள்வது என்பதும் வெவ்வேறானவையாகும். இது மொழி உட்பட எல்லாவற்றுக்கும் பொருந்தும். மொழியைத் தெரிந்து கொண்டவர்கள் எல்லோரும் புரிந்து கொண்டவர்களாகி விடமாட்டார்கள். தமிழில் தோன்றியுள்ள தொல்காப்பியம் உள்ளிட்ட மரபிலக்கணங்களெல்லாம் தமிழை அதாவது தமிழின் அமைப்பியல்புகளைத் தொலைவில் நின்று பார்த்துத் தெரிந்துகொள்ளத் துணைபுரியும் கருவிகளாக அமைந்துள்ளனவே தவிர, ஆழமான விரிந்து பரந்த நோக்கில் அணுக்கமாக நின்று அவற்றைப் புரிந்துகொள்ளத் துணைபுரிவனவாகத் தோன்றவில்லை. இதற்கான அடிப்படைக் காரணம் மரபிலக்கணங்கள் புறநிறைவுக் கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு வகுக்கப்பட்டவையாகும். இத்தகைய இலக்கணங்கள் மொழியின் இயல்பான அடிநிலை அமைப்புகளைக் கருத்தில் கொள்ளாமல் பொருத்தமற்ற செயற்கையான ஆய்வினை முன்மொழிந்து புறநிலை வடிவங்களை வருவிக்க முற்படுகின்றன[1]. இத்தகைய ஆய்வில் அடிநிலை அமைப்புக்கும் புறநிலை வடிவத்துக்கும் இடையிலான நேரிய தொடர்பினைக் கண்டறிய வாய்ப்பில்லாமல் போய்விடுகிறது. சரியான அடிநிலை அமைப்பினை இனங்காண முடியாத நிலையில் செயற்கையான, மொழியின் அமைப்பியல்புக்குப் பொருந்தாத எழுத்தியல் விதிகளை வகுக்க வேண்டிய இக்கட்டான நிலைக்கு அய்ந்திரம் நிறைந்த தொல்காப்பியர் உள்ளிட்ட அனைத்து மரபிலக்கணிகளும் உரையாசிரியர்களும் தள்ளப்பட்டுள்ளனர். இதுபற்றி இவ்வுரையில் சற்று விரிவாகப் பேசப்படும். இவ்வுரையில் அடைப்பில் குறிக்கப்பெற்றுள்ள எண்கள் தொல், எழுத்து, இளம், உரையில் உள்ள நூற்பாக்களின் வரிசை எண்களாகும்.

## 2.0. ஒரு குழந்தைக்கு இரண்டு நற்றாய்களா?

2.1 *மரத்து* (126, 134, 186) *மகத்து* (126, 220) *அழத்தை / புழத்தை* (126, 134, 194) *கலத்து* (126, 169) முதலானவற்றின் அடிநிலை அமைப்புக்களில்

காணப்படும் அத்துச்சாரியையின் நிகழ்ச்சியும் *தாழக்கோல்* (385), *தமிழக்கூத்து / தமிழவேள்* (386), *கம்மக்குடம் / ஈமக்குடம்* (330) முதலானவற்றின் அடிநிலை அமைப்புக்களில் குறிக்கப்படும் அக்குச் சாரியையும் *தேக்குடம் / தேங்குடம்* (341) *தேத்திறால்* (345) ஆகியவற்றின் அடிநிலை அமைப்புக்களில் மக, அழன் ஆகிய நிலைமொழிகளின் நிகழ்ச்சியும் புறநிறைவுக் கோட்பாட்டின் பின்னணியில் அமைந்த ஆய்வின் வெளிப்பாடுகளாகும். இதேபோல் *அதன்* (177), அவற்றை (184, 379) *யாவற்றை* (179) ஆகியவற்றை *அது+அன் / அஃது+அன், அவ்+வற்று / அவை+வற்று, யா+வற்று / யாவை+வற்று* ஆகிய இருவகையான அடிநிலை அமைப்புகளிலிருந்து பெறமுற்படும் தொல்காப்பிய ஆய்வு மரபும் புறநிறைவுக் கோட்பாட்டினைக் கருத்தில் கொண்டதாகும். ஒரு குழந்தைக்கு இரண்டு நற்றாய்கள் எப்படி இருக்க முடியும்? மேலே குறிப்பிட்ட இரட்டை அடிநிலை அமைப்புக்களில் ஒன்றுதான் நற்றாயாக இருக்கமுடியும். *அவை+வற்று* என்ற அடிநிலை அமைப்பிலிருந்து *அவையற்று, அவற்று* இரண்டையும் இயல்பாக வருவிக்க முடியாது. எனவே இந்த அடிநிலை அமைப்பினைச் செவிலித்தாயாகத்தான் கருதமுடியும். செவிலித்தாய் நற்றாயாக முடியாது ஆயினும் தொல்காப்பிய ஆய்வு மரபில் முன்மொழியப்பட்டுள்ள பல அடிநிலை அமைப்புக்கள் செவிலித்தாய் தன்மையனவாகக் காணப்படுகின்றனவே தவிர நற்றாய் இயல்பினவாக அமையவில்லை.

## 3.0 தொல்காப்பிய ஆய்வு மரபு

3.1 *மரத்து, மகத்து* ஆகியவற்றை *மரம்+அத்து, மக+அத்து* என்ற அடிநிலை அமைப்புகளிலிருந்து வருவிக்கும் தொல்காப்பிய ஆய்வு மரபு நமக்கு உடன்பாடில்லை. *தாழக்கோல், தேத்திறால்* ஆகியவற்றை முறையே *தாழ்+அக்கு-கோல், தேன்+இறால்* என்ற அடிநிலை அமைப்புகளிலிருந்து வருவிக்கும் போக்கும் நமக்கு உடன்பாடில்லை. *தேங்குடம், தேக்குடம்* ஆகியவற்றின் அடிநிலை அமைப்புக்களில் *தேன்* என்பதையும், *அழக்குடம்* என்பதன் அடிநிலை அமைப்பில் *அழன்* என்பதையும் நிலை மொழிகளாகச் சுட்டும் தொல்காப்பிய ஆய்வும் நமக்கு ஏற்புடையதன்று. நன்னூலார் அத்துச் சாரியையை ஏற்றுக்கொண்டாலும் தொல்காப்பியரின் வற்று, அக்கு ஆகிய சாரியைகளை ஏற்றுக்கொள்ளவில்லை. *எகினக்கோல், கன்னக்குடம்* ஆகியவற்றின் அமைப்புக்களில் தொல்காப்பியர் அக்குச் சாரியையையும் முன்மொழியவில்லை; அம் சாரியையையும் முன்மொழியவில்லை.

*பொருநக்கடுமை* (300), *வல்லப்பலகை* (375) ஆகியவற்றின் அடிநிலை அமைப்புக்களில் *பொருந், வல்* ஆகிய நிலைமொழிகளை அடுத்து அம் சாரியையின் நிகழ்ச்சிக்கு வாய்ப்பிருந்தும் தொல்காப்பியர் அதனைக் கருத்தில் கொள்ளவில்லை. இதேபோல் *கௌ* (296), *உரிஞ்* (297), *செம்* (328), *மண்* (307), *கல்* (377), *துள்* (402) ஆகிய தொழிற்பெயர்களை அடுத்தும் *ஈம் / கம் / உரும்* (329), *மின் / பின் / பன் / கன்* (346) *வல்* (374), *புள் / வள்* (404) ஆகிய பெயர்களை அடுத்தும் அல்வழி, வேற்றுமை இருவகைப் புணர்ச்சிகளிலும் உம் சாரியையின் நிகழ்ச்சிக்கு வாய்ப்பிருந்தும் தொல்காப்பியர் அதனைப் பொருட்படுத்தவில்லை. மொழியின் அமைப்பியல்புக்கு மாறான ஓர் ஆய்வு மரபைத் தொல்காப்பியர் மேற்கொண்டதற்குக் காரணம் புறநிறைவுக் கோட்பாட்டினைத் தனது இலக்கண விளக்கத்துக்குக் கருவியாகக் கொண்டதேயாகும்.

## 4.0 ஒரு மாற்றுப் பாதை

4.1 தொல்காப்பிய எழுத்தியல் ஆய்வுக்கு ஓர் மாற்று ஆய்வை முன் மொழியவும் வாய்ப்புள்ளது. இந்த ஆய்வு அகநிறைவுக் கோட்பாட்டினைக் கருத்தில் கொண்டதாகும். இதன் பின்னணியில் அமையும் ஆய்வானது மொழியின் முந்திய அமைப்பியல்புகளையும் அவற்றில் தெற்றெனப் புலப்படாத உள்ளார்ந்த ஒழுங்கமைதிகளையும் புரிந்துகொள்ள வகை செய்யக்கூடியதாகும். *மரக்கிளை, மரவுரி / மணவறை, மரவேர், மரத்து* ஆகிய புறநிலை வடிவங்கள் *மரம் / மணம்* ஆகிய மகர ஈற்றுச் சொற்களை நிலைமொழியாகக் கொண்டவையாகும். இவை தொல் சந்தியின் மீது (Proto Sandhi) அமைந்தவையாகும். இந்தச் சந்தியில் *அத்துக்கு* வாய்ப்பில்லை. எனவே *மரத்து* என்ற அமைப்பில் அத்துச் சாரியையின் நிகழ்ச்சியை நாம் ஏற்கவில்லை. *மரத்து* என்பதன் அமைப்பினை நாம் *மரம்+து* என்றே கொள்கிறோம். இதில் நிகழும் துகரக் கிளவியானது அகநிறைவுக் கோட்பாட்டுப் பின்னணியில் அமைந்த வண்ணனை ஆய்வில் சாரியையாகக் கொள்ளப்படும். *பேரக்குழந்தை, மகத்து/மகப்பெயர்/மகப்பேறு, அழக்குடம்/அழத்து, தேங்குடம்/தேக்குடம் சோழநாடு/சோழப்பேரரசு* ஆகியவற்றின் நிலைமொழிகள் மகர ஈற்றுச் சொற்களின் புணர்ச்சி மரபுகளைக் கருத்தில் கொண்டு முறையே **பேரம், *மகம், *அழம், *தேம், *சோழம்* என அக மீட்டுருவாக்கம் செய்யப்படும்[2]. அகநிறைவுக் கோட்பாட்டின் மீது அமைந்த ஆய்வில் அக மீட்டுருவாக்கம் செய்யப்பட்டுள்ள மேற்படி வடிவங்களும் *பேரன், மக, அழன், தேன்,*

*சோழன்* ஆகிய வடிவங்களும் மாற்றுருபுகளாகக் கருதப்படும். *தேத்திறால்* (=தேனிறால்) என்பதில் நிகழும் *தேத்து* என்பது *மரத்து* (<மரம்+து) என்பதைப் போல் **தேம்+து* என்ற அமைப்பினதாக ஆராயப்படும். அகநிறைவுக் கோட்பாட்டின் மீது அமையும் வண்ணனை ஆய்வில் அக்குச் சாரியை தவிர்க்கப்பட்டு அம் சாரியை கருத்தில் கொள்ளப்படும். *எகினக்கால், கன்னக்குடம்* ஆகியவற்றின் அடிநிலை அமைப்புகளிலும் நிலைமொழியை அடுத்து அம் சாரியையின் நிகழ்ச்சி குறிக்கப்படும். *அவற்று, யாவற்று, அதன்* ஆகியவற்றின் அடிநிலை வடிவங்கள் முறையே **அவ்+அற்று* **யாவ்+அற்று, *அஃது+அன்* எனக் கொள்ளப்படும். *அவை, யா/யாவை* ஆகியவற்றின் மாற்றுருபுகளாக *அவ், யாவ்* ஆகியவை கருதப்படும். உரினுக்கடிது/கடுமை (297) ஆகியவற்றின் அடிநிலை அமைப்பு உரிஞ்-உம்+கடிது/கடுமை என்று குறிக்கப்படும். *உருமுக்கடிது/கடுமை, புள்ளுக்கடிது/கடுமை, எண்ணுப் பெயர், கள்ளுக்கடை, வில்லுப்பாட்டு, தெள்ளு தமிழ்* ஆகியவற்றுக்கும் இந்த ஆய்வு பொருந்தும்.

## 5.0 படிநிலைகளின் சுவடுகள்

5.1 வண்ணனை ஆய்வுக்கு உட்படுத்தப்படும் மொழியானது பல (வரலாற்றுப்) படிநிலைகளைக் கொண்ட கூட்டமைப்பின் மீது அமைந்த கட்டமைப்பினதாகும். வண்ணனை ஆய்வானது இந்தப் படிநிலைகளைக் கருத்தில் கொண்டதாக அமைகையில் மொழியின் இயல்பான அமைப்பும், உள்ளார்ந்த ஒழுங்கமைதிகளும் தெற்றெனப் புலப்படும். இதற்கு வகை செய்வது அகநிறைவுக் கோட்பாட்டைக் கருத்தில் கொண்ட வண்ணனை ஆய்வு மரபாகும். இந்த ஆய்வு மரபின்படி தமிழில் ஒரு சொல் அல்லது சாரியையின் நிகழ்ச்சி வழக்கில் வெளிப்படையாகக் காணப்படவில்லையாயினும் நடைமுறையில் உள்ள பொதுவான எழுத்தியல் மரபுகளைக் கருத்தில் கொண்டு அக மீட்டுருவாக்கம் செய்துகொள்ள முடியும். அத்தகைய வடிவங்கள் வண்ணனை ஆய்வில் கற்பிதத் தன்மையனவாகக் கருதப்படும். தொல்காப்பியரின் *அத்து, அக்கு* ஆகிய சாரியைகளும் கற்பித வடிவங்களே. ஆனால் இவை வரலாற்று நிகழ்வுகள் அல்ல. மீட்டுருவாக்கம் செய்யப்பட்ட வடிவங்களாகவும் இவற்றைக் கொள்ளமுடியாது.

## 6.0 இலக்கணிகளின் பொறுப்பும் கடமையும்

6.1 இலக்கண விளக்கம் என்று வரும்போது இலக்கணிக்குச் சில பொறுப்புக்களும் கடமைகளும் உண்டு. இலக்கணம் என்பது மொழியைப்

புரிந்துகொள்வதற்கான கருவியாகலின் அது மொழியின் அமைப்பியல்பைச் சிதைக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு இலக்கணிக்கு உள்ளது. இந்தப் பொறுப்பை உணர்ந்து இலக்கண விளக்க மரபுகளை வகுக்கவேண்டியது இலக்கணியின் கடமையாகும். அத்து, அக்கு, வற்று ஆகிய சாரியைகளைப் படைத்துக் கொண்டதும். இயற்கையான நிலைமொழியின் ஈற்று மெய்யைக் கெடுத்துச் செயற்கையான நிலைமொழிகளைப் படைத்துக் கொண்டதும், இத்தகைய நிலைமொழிகளை அடுத்து வருமொழிக்கேற்ப இன வல்லொற்று மெல்லொற்றுக்களை மிகச் செய்ததும் தொல்காப்பிய ஆய்வு மரபில் காணப்படும் சில இலக்கண விளக்க உத்திகளாகும். இலக்கண விளக்கத்தைப் பொறுத்தவரை இலக்கணிக்குச் சில உரிமைகளும் உண்டு. இந்த உரிமைகளை இலக்கணி தவறாகப் பயன்படுத்துகையில் மொழியின் கட்டமைப்பினைப் புரிந்துகொள்ள முடியாமல் போய்விடுகிறது. தொல்காப்பியரின் அத்து, அக்கு, வற்று ஆகிய சாரியைகள் நேரிய இலக்கண விளக்கத்துக்குத் துணை செய்யும் கருவிகள் அல்ல. இந்தப் பின்னணியில் தொல்காப்பிய எழுத்தியல் ஆய்வு மரபுகள் அல்லது இலக்கண விளக்க உத்திகள் முற்றிலுமாகக் கோட்பாட்டு நிலையில் மதிப்பீடு செய்யப்பட வேண்டியவையாகின்றன. தொல்காப்பியம் தோன்றிய காலந்தொட்டு இன்றுவரை இத்தகைய மதிப்பீடு மேற்கொள்ளப்படவில்லை. உரையாசிரியர்களும் இந்த வகையில் முயற்சி மேற்கொள்ளத் தவறியவர்களாகவே காணப்படுகின்றனர். விளைவு, தமிழின் இயல்பான கட்டமைப்பினைப் புரிந்துகொள்வதில் மிகப்பெரிய பின்னடைவு ஏற்பட்டுள்ளது. ஒற்றைக் கோட்டினை வைத்துக்கொண்டு அது நீளமானதா, குட்டையானதா என்று எப்படிக் கூறமுடியும்? ஓர் இலக்கை அடைய குறைந்தது இரண்டு வழிகளாவது இருந்தால்தான் எது சிறந்த வழி என்று ஒப்பிட்டு மதிப்பீடு செய்யமுடியும். இலக்கண ஆய்வைப் பொறுத்தவரை தொல்காப்பிய மரபு ஒன்றே சிறு சிறு மாற்றங்களுடன் இன்றுவரை போற்றப்பட்டு வருவதால் அதனை மதிப்பீடு செய்ய வாய்ப்பில்லாமற் போய்விட்டது. இத்தகைய சூழலில் தான் நாம் இலக்கண விளக்கத்துக்கு அகநிறைவுக் கோட்பாட்டினை முன்மொழிகிறோம்.

## 7.0 மாறாத மகரச் சந்தி

7.1 *அழக்குடம், அழத்து* ஆகியவற்றில் அடிநிலை அமைப்புக்கள் தொல்காப்பிய ஆய்வில் அழன்+குடம் என்றும் அழன்+அத்து என்றும் கொள்ளப்படுகின்றன. இவற்றின் புறநிலை வடிவங்கள் **அழற்குடம்*,

**அழனத்து* என்றே அமையவேண்டும். இந்த உண்மை தொல்காப்பியர் அறியாததன்று. ஆயினும், *அழக்குடம்*, *அழத்து* ஆகிய புறநிலை வடிவங்களைக் கருத்தில் கொண்டு அதாவது இலக்கை மட்டுமே கருத்தில் கொண்டு வழக்கில் உள்ள *அழன்* என்பதன் ஈற்று மெய்யைக் கெடுத்து இனவல்லொற்றை மிகுத்து *அழக்குடம்* என்பதை அவர் வருவித்துக் கொண்டார். *அழத்து* என்பதைப் பொறுத்தவரை அழன் என்பதை நிலைமொழியாகக் கொண்டு அதன் ஈற்று மெய்யைக் கெடுத்து *அழ+அத்து* என்று ஒரு கற்பித இடைநிலை அமைப்புக்குத் தொல்காப்பியர் வழிவகுத்தமையால் இதிலிருந்து மீள்வதற்கு *அத்தின் அகரம் அகரமுனை இல்லை* (இளம்.126) என்று ஒரு புதிய செயற்கை விதியை வகுத்துக்கொண்டு மேற்படி இடைநிலை அமைப்பிலிருந்து *அழத்து* என்பதை அவர் வருவித்துக் கொண்டார். இந்த உத்திகளை *மரக்கிளை / மரத்து, மகப்பெயர்/மகத்து, அறங்காவல், தேக்குடம்/தேங்குடம் (<தேன்+குடம்) எல்லாக் குறியவும் எல்லாங்குறியவும் (<எல்லாம்+குறியவும்) எல்லாவற்று* (<எல்லாம்+வற்று) அவற்று *(<அவ்+வற்று)* முதலானவற்றை வருவிப்பதற்கும் பயன்படுத்திக்கொள்ளத் தொல்காப்பியர் தயங்கவில்லை. இதனால் படிநிலை வளர்ச்சிப் பரிமாணங்களைக் கொண்ட மொழியின் கட்டமைப்பினைப் புரிந்துகொள்ள வழியும் வாய்ப்பும் இல்லாமற் போய்விட்டன. *மரக்கிளை/மரத்து, அழக்குடம்/அழத்து, மகப்பெயர்/மகத்து அறங்காவல், தேங்குடம்/தேக்குடம்* முதலானவை ஒரு குறிப்பிட்ட தொல் சந்தியைக் கொண்ட படிநிலைக்கு உரியவையாகும். இவற்றின் மகர ஈற்று நிலைமொழிகள் **மகம்* தவிர தொல்காப்பியர் காலத்தமிழில் னகர ஈற்றினவாகத் திரிந்துவிட்டன. **மகம்* என்பது ஈற்று மகரத்தை இழந்துவிட்டது; ஆனால் தொல்சந்தியின் சுவடு நீடித்து நிலைபெற்றுவிட்டது. ஒரு மாறுபட்ட படிநிலையைக் கொண்ட நிலைமொழிகள் தொல்காப்பியர் காலத்தில் நிலவத் தொடங்கின. இதனை நாம் கவனமாகக் கருத்தில் கொள்ளவேண்டும்.

7.2 தொல்காப்பியர் காலப் படிநிலையில் மேற்படி புறவடிவங்களின் நிலைமொழி வடிவங்கள் பிந்திய நிலைமொழி வடிவங்களாகிய *அழன், புழன், மக, தேன்* முதலானவற்றினின்றும் மாறுபட்டவை. பிந்திய நிலைமொழி வடிவங்களைக் கொண்டு தொல்சந்தியின் எச்சமாகிய முந்தைய நிலைமொழி வடிவங்களின் அடியாகத் தோன்றியமைந்த புறநிலை வடிவங்களை ஆராய முடியாது. எடுத்துக்காட்டாக *அழக்குடம், அழத்து* ஆகியவற்றை *அழன்* என்ற நிலைமொழி வடிவத்தைக் கொண்டு ஆராய

முடியாது. ஏனெனில் *அழன்* என்பது *அழம்* என்பதன் பிந்திய வடிவமாகும். *அழக்குடம், அழத்து* ஆகியவை *அழம்* என்ற முந்தைய நிலைமொழி வடிவம் வழக்கில் இருந்த போது தோன்றி நிகழ்ந்தவையாகும். *அழம்* என்பது *அழன்* எனத் திரிந்த நிலையிலும் தொல் சந்திக்குரிய *அழக்குடம், அழத்து* ஆகியவை தொடர்ந்து வழக்கில் நிகழும் நிலை காணப்பட்டதாலும் *அழம்* வழக்கில் இல்லாமற் போய்விட்டதாலும் வேறு வழியின்றி *அழன்* என்ற நிலைமொழியைக் கருத்தில் கொண்டு அவற்றை வருவிக்க வேண்டிய இக்கட்டான நிலை தொல்காப்பியர்க்கு ஏற்பட்டது. தொல்காப்பிய இலக்கணம் பொதுவாக விதிமுறை (Prescriptive) இலக்கணமன்று; அது தமிழ் மொழிக்கான ஒரு வண்ணனை (Descriptive) இலக்கணமாகும். இத்தகைய இலக்கணத்தில் தொல்காப்பியர் தனது ஆய்வு உத்திகளை மாற்றியமைத்துக் கொள்ள வாய்ப்பிருந்தும் அதனை நழுவ விட்டுவிட்டார் என்றே கருதத் தோன்றுகிறது.

**8.0 மகரம் னகரத்தின் திரிபன்று**

8.1 இந்தக் கட்டத்தில் இன்னொரு உண்மையையும் வலியுறுத்த வேண்டியுள்ளது. மொழியீற்றில் மகரமும் னகரமும் உறழும் சொற்கள் தமிழில் மிகுதியாகக் காணப்படுகின்றன. எ-டு. மரம்/மரன், நிலம்/நிலன், அறம்/அறன். இவற்றுள் னகர ஈறு வரலாற்று நிலையில் முந்தையது என்றும் மகர ஈறு பிந்தியது என்றும் ஒரு கருத்து நிலவுகிறது (சுயம்பு 2001 83 84). இந்தக் கருதுகோள் *அழன்/அழம், புழன்/புழம் தேன்/தேம்* முதலான இணைகளை ஏற்றுக்கொண்டாலும் *அழன், புழன், தேன்* முதலானவற்றையே தொன்மை வடிவங்களாகக் கொள்கிறது. இந்தக் கருதுகோள் ஏற்புடையதாகத் தோன்றவில்லை. ஏனெனில், *அழக்குடம், அழத்து, புழத்து, தேக்குடம்/தேங்குடம்* முதலானவற்றை னகர ஈற்று நிலைமொழிகளின் அடியாக வருவிக்க முடியாது. மேலும் *மரன், அறன், நிலன்* முதலான னகர ஈற்றுச்சொற்கள் பழந்தமிழில் சாரியை மற்றும் வேற்றுமை உருபுகளை ஏற்கும் நிலை காணப்படவில்லை. இதேபோல் *கள்* என்னும் பன்மை விகுதியையும் இந்தச் சொற்கள் ஏற்கும் நிலை பழந்தமிழில் காணப்படவில்லை. அடுத்து *மரன் +கிளை* என்ற அடிநிலை அமைப்பிலிருந்து **மரற்கிளை* என்ற புறவடிவம் தான் தோன்றுமே தவிர *மரக்கிளை* என்ற வடிவம் இயல்பாகத் தோன்றியமையாது. செய்யும் வாய்பாட்டு வினைகள் தெலுங்கில் னகர ஈற்றினவாக வழங்குகின்றன. எ-டு. பாடும் (த)/பாடுனு (தெ). மேலே குறிப்பிட்ட கருதுகோளை ஏற்றுக்கொண்டால் *செய்யுன் வாய்பாட்டு வினைகள் வரலாற்று நிலையில்

முந்தியனவாகவும், செய்யும் வாய்பாட்டு வினைகள் பிந்தியனவாகவும் கொள்ள நேரிடும். இந்தக் காரணங்களால் "னகர ஈற்றுச் சொற்களே தொன்மையானவை; எழுத்து வழக்கில் ஏற்கப்பெற்றவை; எனவே அடிநிலைக் கிளவிகளாகும் தகுதியைப் பெற்றுள்ளன". என்ற சுயம்புவின் (2001:84) கருதுகோள் புறக்கணிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

## 9.0 மட்குடமும் நெற்கதிரும்

9.1 தொல்காப்பிய எழுத்தியல் ஆய்வில் ஒரு குறிப்பிடத்தக்க அம்சம் *உரிஞுக்கடிது/கடுமை, புள்ளுக்கடிது/கடுமை, உருமுக்கடிது/கடுமை* முதலானவற்றின் பதிவுகளாகும். இத்தகைய பதிவுகள் *மட்குடம்* (303), பொற்குடம் (333), *கற்குறை/குறிது* (367, 369), *நெற்கதிர்/கடிது* (367, 372), *முட்குறை/குறிது* (397, 399) முதலானவற்றை **மணுக்குடம், *பொனுக்குடம், *கலுக்குறை/குறிது, *நெலுக்கதிர்/கடிது, முளுக்குறை/குறிது* முதலானவற்றின் ஒடுக்கங்களாகக் கொள்ள வகை செய்கிறது. இதனைப் பின்வரும் மாதிரி ஆய்வுகள் மூலம் தெளிவுபடுத்தலாம்.

| | | | |
|---|---|---|---|
| 1 | (அ) | *மணுக்குடம்>மண்க்குடம் | (உகரக்கேடு) |
| | (ஆ) | *மண்க்குடம்>மட்க்குடம் | (ண்>ட்/க்க்) |
| | (இ) | *மட்க்குடம்>மட்குடம் | (க்க்>க்/ட்–) |
| 2. | (அ) | *நெலுக்கதிர்>நெல்க்கதிர் | (உகரக்கேடு) |
| | (ஆ) | *நெல்க்கதிர்>நெற்க்கதிர் | (ல்>ற்/-க்க்) |
| | (இ) | *நெற்க்கதிர்>நெற்கதிர் | (க்க்>க்/ற்–) |

9.2 இந்த ஆய்வுகளில் குமாரசாமி ராஜா (1969, 1980) வலியுறுத்தும் NPP (மெலி-வலி-வலி), LPP (ல ள-வலி-வலி) ஆகிய மெய்ம்மயக்கங்களின் நிகழ்ச்சியைக் காணலாம். இந்த மும்மெய்ம்மயக்கங்கள் ஆய்வின் இடைநிலை வடிவங்களில் நிகழ்வனவாகும். ஆயினும் இந்த மெய்ம்மயக்கங்களில் நிகழும் முதல் வல்லொற்று இன மெல்லொற்றின் திரிபாகும். இதனைப் பின்வருமாறு உணர்த்தலாம்.

| | | | |
|---|---|---|---|
| 3. | (அ) | மண்-உம்+குடம்>மணுங்குடம் | (ம்>ங்/-க்)(ககரம் நிலையொலி) |
| | (ஆ) | மணுங்குடம்>மணுக்குடம் | (ங்>க்/-க்) |
| 4. | (அ) | நெல்-உம்+கதிர்>நெலுங்கதிர் | (ம்>ங்/-க்)(ககரம் நிலையொலி) |
| | (ஆ) | நெலுங்கதிர்>நெலுக்கதிர் | (ங் க்/-க்) |

இந்த ஆய்வானது *எண்ணுப் பெயர், வில்லுப் பாட்டு, கள்ளுக்கடை* முதலானவற்றுக்கும் பொருந்தும்.

## 10.0 குமாரசாமி ராஜாவின் வலித்தல் விகாரம்

10.1 குமாரசாமி ராஜாவின் NPP/LPP கோட்பாட்டினை ஒரு நிலையில் ஏற்றுக் கொள்வதைத் தவிர்க்க முடியாது. ஆயினும் NPP/LPP-யில் நிகழும் PP மெய்ம்மயக்கத்தின் அடிநிலை வடிவம் *NP என்பதையும், இதில் நிகழும் மெல்லொற்றானது வல்லொற்றின் முன் இனமெல்லொற்றாகத் திரியும் என்பதையும் கோட்பாட்டு நிலையில் ஏற்றுக்கொண்டாக வேண்டும். இந்தத் திரிபு தொல்சந்தியின் வெளிப்பாடாகும். தொல்சந்தியில் NPP, LPP ஆகிய மெய்ம்மயக்கங்களுக்கு வாய்ப்பில்லை. மெல்லொற்றானது வல்லொற்றாகத் திரிகையில் அதன் முன் நிகழும் வல்லொற்று நிலையொலியாக (Voiceless Phone) நிகழ்கிறது. இந்த வல்லொற்று அலையொலியாகத் திரிகையில் அதன்முன் நிகழும் மெல்லொற்று வல்லொற்றாகத் திரிவதில்லை. இந்த நிலைமை *புளிஞ்சோறு/புளிச்சோறு* (246, 247) *பூஞ்செடி/பூச்செடி* (269), *வெரிங்குறை/வெரிக்குறை* (301, 302) *பாழ்ங்கிணறு/பாழ்க்கிணறு* (388) ஆகிய இணைகளில் காணலாம். நன்னூலார் குறிப்பிடும் *எகினங்கால்/எகினக்கால், பனந்திரள்/பனைத்திரள்* (<*பனய்-ம்+திரள்) ஆகிய இணைகளிலும் குமரித் தமிழில் வழங்கும் *கோரம்பாய்* (*<கோரய்-ம்+பாய்), *காளங்கன்று* (<*காளய்-ம்+கன்று) ஆகியவற்றிலும் இந்த நிலையைக் காணலாம். **பனய்* (=பனை), **கோரய்* (=கோரை) ஆகியவற்றில் நிகழும் யகரம் மெல்லொற்றின் முன் கெட்டும், மெல்லொற்று வல்லொற்றாகத் திரிகையில் கெடாமலும் இருவகை நிலைப்பாடுகளைக் கொண்டதாக உள்ளது. *பனங்கன்று, தாழம்பூ,* முதலானவை தொடர்பான மரபிலக்கண ஆய்வு நமக்கு உடன்பாடில்லை.

10.2 மெல்லொற்று வல்லொற்றாகத் திரிவதை இரண்டு நிலைகளில் காணலாம். *ஒன்று :* மெல்லொற்றானது தனி வல்லொற்றின் முன் இனவல்லொற்றாகத் திரிதல். இது தொன்மையானதும் தொல்திராவிட அல்லது தொல் திராவிடத்துக்கு முற்பட்டதுமாகிய திரிபாகும். இந்தத் திரிபினை *மரக்கிளை, நிலக்கு* (*<நிலம்-கு), *மகற்கு* (*<மகனுக்கு<மகனுங்கஉ <*மகன்-உம்+கு) *பாடித் திரி* (*<பாடிம்+திரி), *கொய்யச் சொல்* (<*கொயம்+சொல்) முதலானவற்றில் காணலாம். *இரண்டு :* மெல்லொற்றும் மருங்கொலிகளும் இரட்டித்த வல்லொற்றுக்களின்முன் வல்லொற்றாகத் திரிதல். குமாரசாமி ராஜா குறிப்பிடும் NPP, LPP ஆகியவை இந்த இரண்டாம் நிலையில் நிகழ்வனவாகும். இவற்றில் நிகழும் மெல்லொலி, மருங்கொலித் திரிபுகளைத் தொல்திராவிட நிகழ்ச்சிகளாகக் கருத வாய்ப்பிருந்தாலும் இவற்றின் அடிநிலை வடிவங்கள் *NVNP, *LVNP என்றே குறிக்கப்படும். NPP-யில் நிகழும் மெல்லொலியானது பகுதியாக அல்லது நிலைமொழியாக

நிகழும் சொல்லின் ஈற்று மொழியாகும். *NVNP, *LVNP ஆகியவற்றில் வல்லொற்றின்முன் நிகழும் மெல்லொலிக்கும், NPP-யில் நிகழும் மெல்லொலிக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. ஆயினும் இங்கே ஒன்றைக் கருத்தில் கொள்ளவேண்டும். மெல்லொற்றானது தனி வல்லொற்றின் முன் இன வல்லொற்றாகத் திரியும் நிலை *NVNP, LVNP போன்ற அடிநிலை வடிவங்களை மட்டுமே கொண்டதன்று. *அடுக்களை, கடுக்காய், விழுப்புண், குடிப்பழக்கம், எருக்குழி, செருப்பறை, கிளிக்குறிது/கால், தினைக்குறிது/கதிர், தாய்ப்பால்* முதலானவற்றில் நிகழும் வல்லொற்று மிகுதி மகர மெல்லொற்றின் திரிபேயாகும். எடுத்துக்காட்டாக *அடுக்களை* என்பதன் அடிநிலை வடிவம் *அடும்-களை* என்பதாகும். *அடும்* என்பதில் நிகழும் மகரம் ககரத்தின்முன் இனமெல்லொற்றாகத் திரிந்து பின்னர் இனவல்லொற்றாகத் திரிகின்றது. இத்தகைய வல்லொற்றுத் திரிபை, *களை* என்ற சொல் கட்டுப்படுத்துகிறது. எனவே *அடும்+களை* என்பது **அடுங்களை* எனத் திரிந்தமைய வாய்ப்பில்லை. மெல்லொற்று வல்லொற்றின் முன் இனவல்லொற்றாகத் திரிவது ஒரு குறிப்பிட்ட படிநிலை வளர்ச்சிக்கு உரியதாகும். எனவே மகரம் தனி வல்லொற்றின்முன் இன வல்லொற்றாக மட்டுமே தமிழில் திரியும் என்று ஒரு பொது விதியை வகுக்க முடியாது. இன்னும் சொல்லப்போனால் இத்தகைய திரிபு தமிழுக்கு முந்திய தொல் சந்தியின் வெளிப்பாடாகும். எனவே இதனைத் தமிழுக்குரிய திரிபாகக் கருதமுடியாது.

## 11.0 மகரத்தின் திரிபே வல்லொற்றுப் பேறுகள்

11.1. *தாய்க்குலம், தாய்ச்சொல், தாய்த்தொழில், தாய்ப்பால்* ஆகியவற்றில் மிகும் வல்லொற்றுக்கள் எதனையும் அடிநிலை வடிவத்தில் குறிப்பிட முடியாது. ஏனெனில், இவற்றில் ஒரு குறிப்பிட்ட வல்லொற்றின் திரிபாக ஏனைய வல்லொற்றுப் பேறுகளைக் கருத வாய்ப்பில்லை. எனவே அடிநிலை வடிவத்தில் மகரம் ஒன்றே குறிக்கப்பெற்று புறநிலை வடிவத்தில் அது இனமெல்லொற்றுக்களாகத் திரிந்து பின்னர் இனவல்லொற்றுக்களாகத் திரிந்தமைவதாகக் கொள்வதில் எந்தச் சிக்கலும் இல்லை. சாரியை மற்றும் எழுத்துப் பேறுகள் புறநிலை அமைப்பில் நிகழ்வதாகத் தொல்காப்பியர் கருதுவார். இது மறுபரிசீலனைக்கு உரியதாகும். புறநிலை அமைப்பில் திரிபு விதிகள் மட்டுமே வகுக்கப்படும். அகர, உகர எழுத்துப் பேறுகள் அம், உம் ஆகிய சாரியைகளின் எச்சங்களாகக் கொள்ளத்தக்கவை. அதே போல் மெய்யெழுத்துப் பேறுகளும் அதாவது வல்லொற்று மெல்லொற்றுப் பேறுகளும் மகரத்தின் திரிபாகக் கொள்ளப்படும். இதனைக் கருத்தில்

கொண்டு *பலாஅவிதை, மண்ணுவலிது/வலிமை, வல்லநாய்* ஆகியவற்றின் அடிநிலை வடிவங்கள் முறையே **பலா-அம்+விதை, *மண்-உம்+வலிது/வலிமை, *வல்-அம்+நாய்* என்று குறிக்கப்பட்டு புறநிலை அமைப்பில் அம், உம், சாரியைகளில் நிகழும் மகரம் ஒரு சந்தி விதியின் மூலம் தவிர்க்கப்படும். இது *மரவேர், வருவிருந்து* ஆகிய அமைப்புக்களில் நிகழும் சந்தியோடு பொருந்தும். இதேபோல் *தாய்க்குலம், தாய்நாடு* ஆகியவற்றின் அடிநிலை வடிவங்கள் **தாய்-ம்+குலம்/நாடு* எனக் குறிக்கப்பெற்று புறநிலை அமைப்பில் மகரம் வல்லொற்றாகத் திரிவதாகவும், கெடுவதாகவும் சந்தி விதிகள் மூலம் உணர்த்தப்படும்[3]. *பலாஅக்காய்* (227), *பழுஉப்பல்* (262) ஆகியவற்றின் அடிநிலை வடிவங்கள் **பலா-அம்+காய், *பழுவு-ம்+பல்* எனக் குறிக்கப்பெற்று, புறநிலை அமைப்பில் அம்மின் மகரமும், மகரப்பேறும் இனவல்லொற்றுகளாகத் திரிந்தனவாகக் கொள்ளப்படும். பழுவு என்பது வகரம் கெட்டு, முதல் உகரம் நெடிலாகத் திரிந்து *பழுஉ* என்று அமையும். இந்த ஆய்வு *பரூஉத்திரி, குரூஉச்சுடர், குழுஉக்குறி, தழுஉத்தொடர்* ஆகியவற்றில் நிகழும் *பரூஉ, குரூஉ, குழுஉ, தழுஉ* ஆகியவற்றை முறையே **பருவு, *குருவு, *குழுவு, *தழுவு* ஆகியவற்றின் திரிபுகளாகக் கொள்ள வகை செய்கிறது. *பூங்கொடி/பூக்கொடி, பாழ்ங்கிணறு/பாழ்க்கிணறு* ஆகியவற்றின் அடிநிலை வடிவங்கள் **பூ-ம்+கொடி, *பாழ்-ம்+கிணறு* என்று குறிக்கப்பெற்று புறநிலை அமைப்பில் மகரப்பேறு இனவல்லொற்றாகவும் இனமெல்லொற்றாகவும் திரிந்ததாகக் கொள்ளப்படும். *சார்க்காழ்* (365) *சார்ங்கோடு* (364) ஆகியவற்றின் அடிநிலை வடிவங்கள் **சார்-ம்+காழ்/கோடு* எனக் குறிக்கப்பெற்று மகரப்பேறு புறநிலையில் காழ்முன் இன வல்லொற்றாகவும் பிறவற்றின் முன் இன மெல்லொற்றாகவும் திரிந்ததாகக் கொள்ளப்படும். *தளாஅக்காய்* (231), *தளா அங்காய்* (230) என்பவை அடிநிலை அமைப்பில் **தளா-அம்+காய்* எனக் குறிக்கப்பெற்று புறநிலையில் அம்மின் மகரம் இனமெல்லொற்றாகவும் இனவல்லொற்றாகவும் திரிந்ததாகக் கொள்ளப்படும். *செருவக்களம்* (261) என்பது அடிநிலையில் **செருவு+அம்+களம்* எனக் குறிக்கப்பெற்று புறநிலையில் அம்மின் மகரம் இனவல்லொற்றாகத் திரிந்து, *செருவு* என்பதில் நிகழும் ஈற்று உகரம் உயிர்முன் கெட்டதாகக் கொள்ளப்படும். *செருவக்களம்* என்பதில் நிகழும் **செருவு* என்ற நிலைமொழியும், *பழுஉப்பல்* என்பதில் நிகழும் **பழுவு* என்ற நிலைமொழியும் மாறுபட்ட படிநிலைகளில் நிகழ்வதால் அவை மாறுபட்ட சந்தி விதிகளுக்கு உட்படுத்தப்படுகின்றன. இதுகாறும் இந்தப் பத்தியில் கூறப்பெற்ற செய்திகள்

யாவும் தொல்காப்பிய எழுத்தியல் தரவுகளை மாற்று ஆய்வுக்கு உட்படுத்துவதற்கான வாய்ப்பு உள்ளது என்பதைத் தெளிவுபடுத்துவனவாகும். இந்த மாற்று ஆய்வானது அகநிறைவுக் கோட்பாட்டினைப் பின்புலமாகக் கொண்டது என்ற உண்மையையும் இங்கே வலியுறுத்தியாக வேண்டும்.

## 12.0 திணிப்பு விதிகள்

12.1 இலக்கண விளக்கத்தைப் பொறுத்தவரை தொல்காப்பிய எழுத்தியல் ஆய்வானது அடிப்படையில் முன்பே குறிப்பிட்டதுபோல் வண்ணனைத் தன்மையது என்பதில் அய்யமில்லை. ஏனெனில் இந்த ஆய்வானது தரவுகளின் மீது அமைந்ததாகும். ஆயினும் தொல்காப்பிய ஆய்வானது புறநிறைவுக் கோட்பாட்டின் பின்னணியில் அமைந்துள்ளதால் செயற்கை விதிகள் தவிர்க்க முடியாதவை ஆகின்றன. இலக்கை மட்டுமே கருத்தில் கொண்ட இத்தகைய திணிப்பு விதிகள் தொல்காப்பிய ஆய்வின் சில பகுதிகளை விதி இலக்கணமாகக் கொள்ளவும் வகை செய்வதாக உள்ளன. பின்வரும் விதிகள் இந்த வகையில் கருத்தில் கொள்ளத் தக்கவையாகும்.

(1) ஆறன் உருபின் அகரக் கிளவி
ஈறாகு அகரமுனைக் கெடுதல் வேண்டும் (116)
எ-டு. நம+அது>நம-து/நமது

(2) ஆறன் உருபினும் நான்கன் உருபினும்
கூறிய குற்றொற்று இரட்டல் இல்லை
ஈறாகு புள்ளி அகரமொடு நிலையும்
நெடுமுதல் குறுகும் மொழிமுன் ஆன (162)
எ-டு. நாம்>நம்/-அ ; நம்+அ>நம, நம-து/நமது

(3) அத்தின் அகரம் அகரமுனை இல்லை (126)
எ-டு. மக+அத்து>மக-த்து/மகத்து (க்கை)

(4) அத்திடை வரூஉம் கலமென் அளவே (169)
எ-டு. கலம்+அத்து>கல+அத்து>கல-த்து/கலத்து (க் குறைய)

(5) அத்தே வற்றே ஆயிரு மொழிமேல்
ஒற்றுமெய் கெடுதல் தெற்றென் றற்றே
இவற்றுமுன் வரூஉம் வல்லெழுத்து மிகுமே (134)
எ-டு. மரம்+அத்து>மர-அத்து>மர-த்து/மரத்து (க் கிளை)

அவ்+வற்று>அ-வற்று>அவற்று (க் கோடு)

(6) வஃகான் மெய்கெடச் சுட்டுமுதல் ஐம்மின்
அஃகான் நிற்றல் ஆகிய பண்பே (123)
எ-டு. அவை+வற்று>அவை-அற்று>அவையற்று

(7) யாவென் வினாவின் ஐயென் இறுதியும்
ஆயியல் திரியாது என்மனார் புலவர்.
ஆவயின் வகரம் ஐயொடும் கெடுமே (179)
எ-டு. யாவை+வற்று>யாவ்-வற்று>யா-வற்று/யாவற்று (-ஐ)
நல்லவை+வற்று>நல்லவ்-வற்று>நல்ல-வற்று>நல்லவற்று (-ஐ)

(8) சுட்டுமுதல் வகரம் ஐயும் மெய்யும்
கெட்ட இறுதி இயல்திரி பின்றே (184)
எ-டு. அவை+வற்று>அவ்-வற்று>அவற்று/அவற்று (-ஐ)

(9) சுட்டுமுத லாகிய வகர விறுதி
முற்படக் கிளந்த உருபியல் நிலையும் (379)
எ-டு. அவ்+வற்று>அ-வற்று/அவற்று (க் கோடு)

(10) மகர இறுதி வேற்றுமை யாயின்
துவரக் கெட்டு வல்லெழுத்து மிகுமே (311)
எ-டு. மரம்+கிளை>மர-கிளை>மரக்கிளை

(11) மெல்லெழுத்து உறழும் மொழியுமா ருளவே
செல்வழி யறிதல் வழக்கத் தான (313)
எ-டு. குளம்+கரை>குள-கரை>குளக்கரை/குளங்கரை

(12) அழனென் இறுதிகெட வல்லெழுத்து மிகுமே (355)
எ-டு. அழன்+குடம்>அழ-குடம்>அழக்குடம்

(13) தேனென் கிளவி வல்லெழுத் தியையின்
மேனிலை ஒத்தலும் வல்லெழுத்து மிகுதலும்
ஆமுறை இரண்டும் உரிமையும் உடைத்தே
வல்லெழுத்து மிகுவழி இறுதி இல்லை (341)
எ-டு. தேன்+குடம்>தேன்குடம்/தேற்குடம்
தேன்+குடம்>தே-குடம்>தேக்குடம்

(14) மெல்லெழுத்து மிகினும் மான மில்லை (342)
எ-டு. தேன்+குடம்>தே-குடம்>தேங்குடம்

(15) எப்பெயர் முன்னரும் வல்லெழுத்து வருவழி
அக்கின் இறுதிமெய்ம் மிசையொடும் கெடுமே
குற்றிய லுகரம் முற்றத் தோன்றாது (129)
எ-டு. தாழ்-அக்கு+கோல்>தாழ்-அ+கோல்>தாழக்கோல்

12.2. மேலே குறிப்பிட்டவை தவிர இவை போன்ற மேலும் பல நூற்பாக்கள் தொல்காப்பிய எழுத்தியல் ஆய்வில் காணப்படுகின்றன. இத்தகைய நூற்பாக்கள் அனைத்தும் முன்மொழியும் ஆய்வு மரபுகள் செயற்கைத் தன்மையனவாகும்; இவை வலிந்து மொழியின்மீது திணிக்கப்பட்டவையாகும். இந்த ஆய்வு மரபுகள் இலக்கை மட்டுமே குறியாகக் கொண்டவையாகும். இலக்கை அடையும் நெறியைப் பற்றி இவற்றுக்குக் கவலை இல்லை. இது புறநிறைவுக் கோட்பாட்டின் அடியாக அமையும் இலக்கண விளக்கத்தில் தவிர்க்க முடியாததாகும். அகநிறைவுக் கோட்பாட்டின் மீது அமைந்த இலக்கண விளக்க ஆய்வில் இலக்கைப் போலவே அதனை அடையும் நெறியும் முக்கியத்துவம் பெறுகின்றது. எனவேதான் தொல்காப்பிய எழுத்தியல் ஆய்வானது அகநிறைவுக் கோட்பாட்டின் அடிப்படையில் மறுபரிசீலனைக்கு உரியதாகின்றது. தொல்காப்பிய ஆய்வுக்கு ஒரு மாற்று ஆய்வை முன்மொழிவதற்கான வாய்ப்பு உள்ளது என்பதை மேலே அகநிறைவுக் கோட்பாட்டின் அடியாகக் கோடிட்டுக் காட்டப்பெற்ற ஆய்வு நன்கு தெளிவுபடுத்துகிறது. தொல்காப்பிய எழுத்தியல் ஆய்வானது விதிமுறை இலக்கண மரபைக் கருத்தில் கொண்டதல்ல என்றாலும் மேலே குறிப்பிட்டதுபோன்ற சில நூற்பாக்கள் ஆய்வைச் சிக்கலாக்குவதுடன் செயற்கையாகவும் ஆக்கிவிடுகின்றன. மொழியின்மீது வலிந்து திணிக்கப்படும் எந்த ஆய்வும் இலக்கண விளக்கத்தை விதிமுறை இலக்கணமாகக் கருத வகை செய்துவிடுகின்றது. இதனைத் தவிர்ப்பதற்கு அகநிறைவுக்கோட்பாட்டின் மீது அமைந்த ஆய்வே ஒரு சிறந்த மாற்றாகும்.

## அடிக்குறிப்புகள்

1. எடுத்துக்காட்டாக, தொல்காப்பியரின் *பழுஉப்பல்* (எழுத்து, இளம் 262) தொடர்பான ஆய்வு இந்த வகையில் கருத்தில் கொள்ளத்தக்கதாகும்.

2. வண்ணனை ஆய்வில் அக மீட்டுருவாக்கங்களுக்கு வாய்ப்பிருந்தும் மரபிலக்கணங்கள் அவற்றைக் கருத்தில் கொள்ளத் தவறிவிட்டன. காரணம் மீட்டுருவாக்கக் கோட்பாடு மரபிலக்கணங்கள் தோன்றிய

காலத்தில் வகுக்கப்பட்டவில்லை. தொல்வடிவங்களின் திரிபுகளாக வழக்கில் நிகழும் வடிவங்களைக் கொண்டே தொல்லமைப்புக்களை ஆராயும் போக்கே மரபிலக்கணங்களில் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக *அழக்குடம்*, *அழத்து* ஆகிய தொல்லமைப்புக்களை அகமீட்டுருவாக்கத்தின் மூலம் கண்டறியாமல் வழக்கில் உள்ள வடிவத்தையே நிலைமொழியாகக் கொள்கிறது தொல்காப்பியம். இந்த மரபை நன்னூலும் பின்பற்றுகிறது.

3. இந்தச் சந்தியில் நிகழும் மகரப்பேறே தாய்மை என்பதிலும் நிகழ்கிறது. பல மையீற்றுப் பெயர்களில் மகரத்தை நிலைமொழியையடுத்து நிகழும் எழுத்துப் பேறாகக் கருதலாம்.

இந்தக் கருதுகோள் *ஒருமை* என்பதையும் ஒருத்தி என்பதையும் **ஒரும்+ஐ, *ஒரும்+தி* என்ற அமைப்பினவாகக் கொள்ள வகை செய்கின்றது.

**கருவி நூல்கள்**


1. சுயம்பு 2001 *தொல்காப்பியரின் புணர்ச்சி வருணனைக் கோட்பாடு* (கருத்தரங்க ஆய்வுக் கோவை - பதிப்பர் சே. ஜீன் லாறன்ஸ்)

2. ஜீன் லாறன்ஸ், சே. (பதிப்பர்) 2001. *தொல்காப்பிய இலக்கண மொழியியல் கோட்பாடுகள்,* சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

3. Kumaraswamy Raja, N. 1969. *Post Nasal Voiceless Plosive in Dravidian,* Annamalai Nagar, Annamalai University.

4. ________________ 1980. Three Consonant Clusters in Tamil in M.Israel (Ed) Isreal. M, et al, 1980. A Festschrift to M. Shanmugam Pillai, Madurai, Madurai Kamaraj University.



முனைவர். இரா. கோதண்டராமன்,
88, தொல்காப்பியர் வீதி,
அசோக் நகர், புதுச்சேரி 605 008.
தொலைபேசி (0413) 2251044

# உ.வே.சா.வும் குமரகுருபரர் படைப்புக்களும்

## தமிழ்த்தேனீ

எனக்கிருந்த தமிழ்ப்பசி மிக அதிகம். மற்ற இடங்களில் நான் பாடம் கேட்டபோது அவர்கள் கற்பித்த பாடம் யானைப் பசிக்குச் சோளப்பொரி போல இருந்தது. பிள்ளையவர்களிடம் வந்தேன்; என்ன ஆச்சரியம். எனக்குப் பெரிய விருந்து, தமிழ் விருந்து கிடைத்தது. என் பசிக்கு ஏற்ற உணவு; சில சமயங்களில் அதற்கு மிஞ்சிக் கூடக் கிடைக்கும்.

(உ.வே.சா.என் சரித்திரம் பக்கம் 183)

தம் ஆசிரியர் மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடம் தாம் கற்ற தமிழ்க் கல்வியை உ.வே.சா. இவ்வாறு கூறுகிறார்.

உ.வே.சா. தமிழ் மீது கொண்ட பற்றைப் போன்று தம் ஆசிரியரிடமும் பற்றும் மதிப்பும் கொண்டிருந்தார். அவரது பெயரைக் குறிப்பிடுதற்குக் கூடத் தயக்கம் அவரிடம் காணப்பட்டது. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை சரித்திரம் எழுதும் போது தம் மனநிலையை வெளிப்படுத்தியுள்ளார். ஆசிரியர் மீது அளவற்ற உரிமை பாராட்டுகிறார். 'என்னுடைய ஆசிரியர்' என்று எழுதுவதில் இந்த உரிமையைக் காணமுடிகிறது.

ஆசிரியரும் மாணவரிடம் பேரன்பு காட்டினார். உத்தமதானபுரம் வேங்கட சுப்பையர் மகன் வேங்கடராமன் என்ற பெயரைச் சாமிநாதையர் என்று மாற்றும் அளவுக்கு அந்த அன்பு உரிமை பெற்றது. உ.வே. சாமிநாதையர் என்ற பெயரே வரலாற்றில் நிலைக்கலாயிற்று.

உங்களுடைய நோக்கம் என்ன? என்று எழுதுமாறு கலைமகள் ஆசிரியர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க அவர் இவ்வாறு எழுதுகிறார்.

> என்னுடைய வாழ்வின் நோக்கமெல்லாம் பெரும்பாலும் தமிழின் தொடர்புடையது தான். தமிழ் நூல்களை ஆழ்ந்து பயிலவேண்டும். பலமுறை பயின்றால் தான் உண்மை புலப்படும். ஒரு நுவிலுள்ள சொற்சுவை பொருட்சுவைகளை அனுபவித்துப் படிக்கவேண்டும். அவற்றைப் பிறரும் அறியும் வண்ணம் எளிய நடையில் எழுதவும் சொல்லவும் வேண்டும்.

உ.வே.சா.-(கலைமகள், மார்ச்சு 1935)

உ.வே.சா.வின் நோக்கமே அவரை ஈடில்லாத் தமிழறிஞராக உருவாக்கிற்று. நூல் மலர்களைத் தேடிக் கண்டறிந்து தமிழ்த் தேனை மாந்தி இன்பம் துய்த்த தமிழ்த் தேனீயாக அவரது வாழ்வு அமையலாயிற்று.

**தூண்டுகோல்**

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடமும் திருவாவடுதுறை ஆதீனத் தலைவர் சுப்பிரமணிய தேசிகரிடமும் தமிழை ஐயந்திரிபறக் கற்றவர் என்ற பெருமை உ.வே.சா.வுக்கு இருந்தது. அந்நாளில் சிற்றிலக்கியங்களும் சித்தாந்த சாத்திரங்களும் பிற பக்தி இலக்கிய இலக்கண நூல்களுமே தமிழ் நூல்கள் என்று அறிமுகமாகி இருந்தன. இச்சூழலில் நீதிபதி சேலம் இராமசாமி முதலியாரைச் சந்திக்கும் வாய்ப்பு உ.வே.சா.வுக்கு அமைந்தது. இருவரும் உரையாடும் போது, தாம் கற்றிருக்கும் சிற்றிலக்கியங்களின் நீண்ட பட்டியலைக் கூறினார். இந்தப் பிற்காலத்துப் புத்தகங்களெல்லாம் படித்தது சரிதான். பழைய நூல்களில் ஏதாவது படித்ததுண்டா? என்ற வினாவை முதலியார் எழுப்பினார். சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை பற்றிக் கூறினார். ஸ்ரீவைகுண்டத்தைச் சார்ந்த ஒரு கவிராயரிடமிருந்து தாம் பெற்ற சீவகசிந்தாமணியை உ.வே.சா.விடம் கொடுத்து, அதைத் தமக்கு விளக்கிச் சொல்லுமாறு கேட்டார். இராமசாமி முதலியாரின் சந்திப்பே உ.வே.சா.வின் தமிழ்ப் பணிக்குப் பெரும் தூண்டுகோலாயிற்று.

**பவ்ய ஜீவன்**

நச்சினார்க்கினியர் உரையுடன் இருந்த அச்சிந்தாமணியை உ.வே.சா. ஆராய்ந்தார். அதன் பகுதிகளுள் பல அவருக்குப் புதிய கருத்து உடையனவாகத் தோன்றின. முதலாவது பாடலே பெரும் சிக்கலாயிற்று.

'மூவா முதலா வுலகம்மொரு மூன்று மேத்த' என்னும் முதலடி தாம் கற்றிருந்த சைவக் கருத்துக்கு முரணாக இருந்தது. 'அந்தமும் ஆதியும் இல்லாத மூலவுலகமும்' என்னும் உரைக்கருத்து, நிலைமாறும் இயல்புடையது உலகம் என்று அறிந்திருந்த கருத்திலிருந்து முற்றிலும் புதியதாகத் தோன்றியது. எனவே சமண சமயக் கருத்துக்களை அறிந்து தெளியும் நோக்கில் சமண அறிஞர்களைத் தேடி அலைந்தார். சந்திரநாத செட்டியார் வீடூர் அப்பாசாமி போன்றோர் நட்பு கிடைத்தது. குணபால செட்டியார் என்பவரும் அவரது மனைவியாரும் உ.வே.சா.வின்

ஐயங்களைத் தெளிவுபடுத்தினர். முகத்தை வெளியே காட்டாமலேயே வீட்டினுள் இருந்து கொண்டு விளக்கம் தந்த அப்பெண்மணி உ.வே.சா.வைப் 'பவ்யஜீவன் போல் இருக்கிறதே' என்று கணவரிடம் கூறினார் பவ்யஜீவன் என்பதற்குப் 'பக்குவம் அடைந்த ஆன்மா' என்பது பொருள்.

சுப்பிரமணிய தேசிகரும் திருநெல்வேலி மடத்திலிருந்து ஒரு சிந்தாமணிப் பிரதியை வருவித்துக் கொடுத்தார். நண்பர்கள் சிலரிடம் கடன்பெற்று உ.வே.சா.சிந்தாமணியைப் (1887-ல்) பதிப்பித்தார்.

சீவக சிந்தாமணியை அடுத்து உ.வே.சா. பத்துப்பாட்டை (1889 இல்) வெளியிட்டார்.

## இழந்த குழந்தையைத் தேடிய தாய்

நூல்களைத் தேடிக் கண்டு, அவற்றைத் தம் கையகப்படுத்துவதற்குள் உ.வே.சா. அடைந்த இன்னல்களுக்குச் சிறிதும் குறைந்தது அல்ல - அவர் அவற்றைப் பதிப்பிக்கும் போது எய்திய இன்னல்கள் பல. அரைகுறையாக-உதிர்ந்த மலர்களாகக் கிடைத்த நூல்களை நிறைவு செய்வதற்காக, பிற ஏடுகளைத் தேடிச் செல்ல நேர்ந்தது. நூல்களின் பாடல் அமைப்புக்களின் உண்மை வடிவங்களைக் கண்டறியும் முயற்சி ஒரு புறம்; அப்பாடல்களுக்குச் சரியான விளக்கங்களை அறிகிற முயற்சி மற்றொரு புறம். இவை தவிர, செம்மைப்படுத்தப்பட்ட நூல்களை அச்சிடுதற்கான பணம் இல்லாமல் அவர் அடைந்த துன்பங்கள் அளப்பதற்கு அரியவை.

குறிஞ்சிப்பாட்டை ஆராய்ந்து கொண்டிருந்த வேளையில் தான் அடைந்த துன்பத்தை உ.வே.சா. விரிவாகக் கூறுகிறார்.

> அங்கே செங்காந்தட் பூ முதல் செம்பூ வரையிற் பல மலர்கள் சொல்லப்படுகின்றன. செங்கோடுவரி என்னும் பூவுக்கும் கூவிளம்பூவுக்கும் இடையிலே சிதைவு காணப்பட்டது. ஏட்டுச்சுவடியில் அடிவரையறையோ, அடிகளின் எண்ணோ இராது. இத்தனை அடிகள் அங்கே இல்லையென்று விளங்கவில்லை. எத்தனை மலர்கள் உதிர்ந்து விட்டனவோ? அவற்றை எங்கே தேடி எடுத்துக்கோத்துக் குறையை நிரப்புவோம்! என்று நான் ஏங்கினேன்.
>
> (நல்லுரைக் கோவை, நான்காம் பாகம், பக்கம் 55-56)

தாம் போய்த் தேடாத இடம் தருமபுரம் ஆதீனமே என்று உணர்ந்தார். அது தனக்கு ஆதரவு தரும் திருவாவடுதுறை ஆதினத்திற்குப் பகை ; எனினும் மாயவரம் தேவநாயகம்பிள்ளையுடன் அங்கே சென்றார். பல ஏடுகளைப் பார்த்தனர். இறுதியில் ஆதீனத்தலைவர் மாணிக்கவாசக தேசிகர் ஒரு பீரோவில் குப்பைகளோடு குப்பையாக வைக்கப்பட்டிருந்த ஏடுகளைக் காட்டினார். ஐம்பது அறுபது ஒற்றை ஏடுகள் அவை. அவற்றைக் கட்டிக்கொண்டு கும்பகோணம் சென்று ஆராய்ந்தார். குறிஞ்சிப் பாட்டு ஏடுகள் கிடைத்தன. ஒரு நாள் முழுவதும் உண்ணாது, மெய்வருத்தம் பாராது தேடிய ஏடுகளைக் கண்டதும் அவர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை. அந்த மகிழ்ச்சி,

என்மனம் ஆறுதலுற்றது. இழந்த குழந்தையைக் கண்டெடுத்த தாய்க்கு உண்டாகும் மகிழ்ச்சியைத் தான் நான் அதற்கு உபமானமாகக் கூறலாம்.

(நல்லுரைக் கோவை, நான்காம் பாகம், பக்கம் 67)

என்று உ.வே.சா. குறிப்பிடுகிறார்.

**சிறப்பதிகாரம்**

உ.வே.சா. நாவலர்களும், கவிராயர்களும் வாழ்ந்து வாழ்கிற ஊர்களை நாடிச் சென்று சுவடிகளைத் தேடினார். அவரது தமிழ்ப் பயணம் திருநெல்வேலி, ஸ்ரீவைகுண்டம் ஆழ்வார்திருநகரி, மதுரை எனத் தென்தமிழகத்தை நோக்கியதாக நீண்ட பயணமாக இருந்தது. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, சிலப்பதிகாரம் போன்ற நூல்களைப் பெற முடிந்தது. சிலப்பதிகாரத் தேடலில் அவர் அடைந்த அனுபவம் சுவையானது. அதைப் பின்வருமாறு விவரிக்கிறார்.

திருநெல்வேலியிலிருந்து திரிகூடராசப்பக் கவிராயரையும் அழைத்துக் கொண்டு அம்பாசமுத்திரம் சென்றேன். இடையே ஓர் ஊரில் ஓர் அபிஷிக்தர் (சைவர்களின் குரு) வீட்டுக்குப் போனோம்... 'வாருங்கள்' என்று எங்களை வரவேற்றார்...

"உங்களிடம் ஏட்டுச் சுவடிகள் இருப்பதாகக் கேள்வியுற்றேன். அவற்றைப் பார்க்கலாமென்று வந்தேன்" என்றேன்.

"அப்படியா? உங்களுக்கு என்ன வேண்டும்? என்று கேட்டார்.

நான் "சிலப்பதிகாரம் வேண்டும்" என்றேன்.

"சிறப்பதிகாரமா? இருக்கும்" என்று அழுத்தந்திருத்தமாகச் சொன்னார்.

"சிறப்பதிகாரமல்ல; சிலப்பதிகாரம்" என்று நான் இடைமறித்துச் சொன்னேன். சிறப்பதிகாரமென்றுதான் சொல்லவேண்டும். நீங்கள் சிறுபிள்ளை; உங்களுக்குத் தெரியாது என்று கூறியபோது கவிராயர், "அது கிடக்கட்டும்; புத்தகத்தைக் காட்டச் சொல்லவேண்டும்" என்றார்.

(என் சரித்திரம், பக்கம் 685)

சிலப்பதிகாரத்திற்குப் (1892-இல்) பின்னர்ப் புறநானூறும் (1894-ல்) புறப்பொருள் வெண்பாமாலையும் (1895-ல்) வெளியிடப்பட்டன.

## பௌத்தப் பிரவர்த்தனாசாரியார்

மணிமேகலையைப் பதிப்பித்தபோது சீவகசிந்தாமணிப் பதிப்பின் போது அடைந்த நிலையை உ.வே.சா. எய்தினார். மணிமேகலை பௌத்த நூல். எனவே பௌத்த சமயக் கருத்துக்களை அறிந்துகொள்வதில் ஆர்வம் கொண்டார். மானியர்வில்லியம்ஸ், மாக்ஸ்முல்லர், ஓல்டன்பாக், ரைஸ் டேவிஸ் முதலியோர் ஆங்கிலத்தில் எழுதிய நூல்களை ரங்காச்சாரி என்னும் நண்பர் வாயிலாக மொழிபெயர்த்து அறிந்து கொண்டார். நூல் வெளியானதும் பாராட்டுக்கள் குவிந்தன. ஒரு பௌத்தர் உ.வே.சா.வைப் "பௌத்த சமயப் பிரவர்த்தனாசாரியார்" என்று பாராட்டி விவேக தினகரன் இதழில் எழுதியிருந்தார்.

ஐம்பெருங்காப்பியங்களுள் சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை மூன்று கிடைக்கப்பெற்றும் ஏனைய வளையாதியும் குண்டலகேசியும் கிடைக்கப் பெறவேயில்லையே வருத்தம் உ.வே.சா.வுக்கு இறுதிநாள் வரையிலும் இருந்தது.

## இந்திர இழவூரெடுத்த காதை

முன்னாளில் மாணாக்கர்கள் ஏட்டில் எழுதிப் படித்து வந்தனர். ஒருவர் படிப்பார். அதைச் செவியால் கேட்டுப் பலர் எழுதுவர். இதனால் ஒரு நூலுக்குப் பல பிரதிகள் உருவாகும். எழுதியோரின் புலமை, கேட்கும் திறனுக்கு ஏற்ப ஏடுகளில் செம்மையும் பிழைகளும் அமையும். எனவே, பதிப்பாளருக்கு சரியான மூல பாடத்தை அறிவதில் சிக்கல்கள் மிகுதியாகின்றது.

சுவடிகளைப் படித்துப் பேர்த்து எழுதுவதில் உள்ள இன்னல்களை உ.வே.சா.குறிப்பிட்டுள்ளார். இது கொம்பு, இதுசுழி என்று வேறு பிரித்து அறியமுடியாது. மெய்யெழுத்துக்களுக்குப் புள்ளியே இராது. ரகரத்துக்கும், காலுக்கும் வேற்றுமை தெரியாது. சாபம், சரபமாகத் தோற்றும், சரபம்

சாபமாகத் தோற்றும். ஓரிடத்தில் சரடு என வந்திருந்த வார்த்தையை நான் சாடு என்றே பல காலம் எண்ணி வந்தேன்; தரன் என்பதைத் தான் என்று நினைத்தேன்; இடையின ரகரத்துக்கும் வல்லின ரகரத்துக்கும் பேதம் தெரியாமல் மயங்கின இடங்கள் பல... இப்படியே குருதி என்பதைக் குந்தியென்றெண்ணித் தடுமாறினேன்.

(என் சரித்திரம், பக்கம் 559-560)

ஏடுகளைப் பிழையின்றிப் படிப்பதற்கு யாப்பு இலக்கண அறிவும் அவற்றில் கூறப்படுகிற கருத்துக்கள் பற்றிய முன்னறிவும் உதவியாக இருந்தன. இலக்கணப் புலமை மிக்கவர் உ.வே.சா. எனவே கருத்துக்களில் தெளிவுக்காகப் பல துறை சார்ந்த அறிஞர்களை அவர் நாடிச்செல்ல வேண்டி இருந்தது. 'குறிப்பாக, சமண, பௌத்த நூல்களைப் பதிப்பிக்கும் போது இந்த அனுபவத்தை அவர் பெற்றார். மேலும், சில பாடல்களுக்குச் சாதாரணமான உரையாடல்களும் அவருக்குக் கை கொடுத்தது. 'கும்மாயம்' என்ற சொல்லின் பொருளைக் குடந்தைச் சாரங்கபாணி திருக்கோயிலில் அறிந்ததை அவர் குறிப்பிடுகிறார்.

ஏடுகளைப் படிப்பதில் தேர்ந்த அனுபவம் இல்லாதவர் பட்டபாட்டினை உ.வே.சா. வித்துவான் தியாகராச செட்டியார் வரலாறு வாயிலாகப் புலப்படுத்தியுள்ளார். இந்திரவிழ வூரெடுத்த காதையா? இந்திர இழவூரெடுத்த காதையா? என்று சலித்துக் கொண்டு, செட்டியார் கல்லூரியிலிருந்து 6 மாதம் விடுப்பு எடுத்துச் சென்று விட்டாராம்.

## குமரகுருபரர் படைப்புக்கள்
### கருவி நூல்கள்

தமிழ் இலக்கியப் பரப்பில் சிற்றிலக்கியங்கள் எனப்படும் பிரபந்தங்கள் இன்றியமையாத இடத்தைப் பெற்றுள்ளன. இவை தமிழ் இலக்கிய மரபுகளைப் பேணுகின்றன. தொல்காப்பியத்திற்கும் முந்தைய காலங்களில் தோன்றிய இலக்கிய வகைமைகள் இறவாது காலத்திற்கு ஏற்ற மாற்றங்களை ஏற்ற நிலையில், புதிய பொலிவுடன் பழைய மரபுகள் இவற்றில் இறவாது காக்கப்படுகின்றன. தமிழரின் வரலாற்று நிகழ்ச்சிகளையும் பண்பாட்டுக் கூறுகளையும் கருத்துக்களாகக் கொண்டமையால் இவ்வகை இலக்கியங்கள் தமிழினத்தின் முழுமையான வாழ்வியலின் காப்பு ஆவணங்களாகத் திகழ்கின்றன. இவை போன்ற சிறப்புக்களைப் பெற்றிருப்பதோடு, தமிழ்க்கவிதைக் கட்டமைப்புக்களின் நடைமுறைக்

காட்சியாகவும் விளங்குதலால், சிற்றிலக்கியங்களை கற்பது பண்டைய கல்விமுறையில் இன்றியமையாத பாடமாக நடைமுறையில் இருந்தது. இதனை 'ஸ்ரீ குமர குருபர சுவாமிகளின் பிரபந்தத் திரட்டு'க்குப் பெரும் பேராசிரியர் டாக்டர் உ.வே.சா. அவர்கள் எழுதிய முகவுரையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

> தமிழ்நாட்டில் பண்டைக்காலந் தொடங்கித் தமிழ் பயிலும் மாணாக்கர்கள் முதலில் சிறு நூல்களைக் கற்றல் வழக்கமாக இருந்தது. அந்தாதி, சிலேடை வெண்பா, மாலை, கலம்பகம், கோவை, மடல், பரணி என்பவற்றை ஒன்றன்பின் ஒன்றாகப் படித்து வருவார்கள். தமிழில் அடிப்படையான உணர்ச்சி வருவதற்குப் பிரபந்தங்கள் உதவியாக இருத்தலின் அவற்றை வித்துவான்கள் கருவி நூல்கள் என்று வழங்குவர்.

தமிழ் இலக்கியங்களின் புறஅமைப்பாகிய யாப்பு வகைகளுக்கும் அக அமைப்பாகிய கருத்து வகைகளுக்கும் கண்கண்ட சான்றுகளாகச் சிற்றிலக்கியங்கள் உள்ளன. எனவே இவற்றைக் கற்பதன் வழிப் பல்வேறு இலக்கிய வகைகளை ஐயமற அறிந்து கொள்ள இயலும். இதனையே உ.வே.சா. 'கருவி நூல்கள்' என்று குறிப்பிடுகிறார். சிற்றிலக்கியங்களை எழுத்து முதலாகச் சந்தம் ஈறாகப் படித்து, மனப்பாடம் செய்து கொண்டதன் வாயிலாக மாணவர்கள் புலமை பெறுதல் எளிதாக ஆயிற்று.

> இவ்வாறு தமிழ் பயில்வாரிற் பெரும்பாலோர் தவறாமல் படித்துப் பயன்பெறும் பிரபந்தத் தொகுதிகளுள் முன் வரிசையிலே நிற்பது குமரகுருபர சுவாமிகளின் பிரபந்தத் தொகுதி ...
>
> எனது இளமை முதலே எனக்குக் குமரகுருபர முனிவர் வாக்கில் ஈடுபாடு மிகுதியாக இருந்து வந்தது. முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ் முழுவதையும் அப்போது பாராயணம் செய்து வந்ததுண்டு. தமிழ்நாட்டிலிருந்த வித்துவான்கள் சில வகையான கற்பனைச் செய்யுட்களைப் பாடம் செய்து கொண்டு அவற்றைக் கூறிப் பொருள் விரிவாகச் சொல்லி அவ்வப்போது தம்மிடம் வருவோர்களையும் தாம் செல்லுமிடங்களில் உள்ளோரையும் மகிழ்வித்து வருதலைக் கண்டிருக்கிறேன். அங்ஙனம் அவர்கள் கூறும் செய்யுட்களில் குமரகுருபரர் செய்யுட்களும் இருக்கும்.

குமரகுருபர சுவாமிகளின் சிற்றிலக்கியங்களின் பெருமையை இவ்வாறு விவரிக்கிற உ.வே.சா. திருப்பனந்தாள் காசி மடத்தின் தலைவர் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சாமிநாத சுவாமிகளின் வேண்டுதலை ஏற்று, அவற்றைப் பதிப்பித்ததாகக் கூறுகிறார்.

## குமரகுருபரர் பிரபந்தத் திரட்டுப் பதிப்பு

குமரகுருபர சுவாமிகளின் படைப்புக்கள் சிதம்பரம் ஈசானிய மடத்தைச் சார்ந்த இராமலிங்க சுவாமிகள், தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் போன்ற சிலரால் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றோடு, தமிழகம் முழுவதுமாகத் தாம் பயணம் செய்து சேகரித்த ஏட்டு நூல்களையும் ஒப்பிட்டு நோக்கித் திருத்தமுள்ள பதிப்பாக உ.வே.சா. இப்பணியைச் செய்துள்ளார்.

ஸ்ரீ குமர குருபர சுவாமிகளின் பிரபந்தத் திரட்டின் முகவுரையில் தமக்குப் பிரதிகளைக் கொடுத்து உதவிய அறிஞர்களையும் வள்ளல்களையும் மறவாது நன்றியுடன் பதிவு செய்துள்ளார். அவர்களுள் வள்ளல் பாண்டித்துரைத் தேவர், வித்துவான் சி.தியாகராச செட்டியார், திருவாவடுதுறை ஆதீனம், மதுரை திருஞான சம்பந்த சுவாமிகள் ஆதீனம், திருநெல்வேலி, ஈசுவரமூர்த்தி கவிராயர் ஆகியோர் குறிக்கத்தக்கோர்.

நூற்பதிப்பில் உடனிருந்து உதவிய தம் மாணாக்கர் கலைமகள் துணையாசிரியர் கி.வா.ஜகந்நாதையரையும் நன்றியுடன் உ.வே.சா. நினைவு கூர்கிறார்.

குமரகுருபர சுவாமிகளின் பிரபந்தத் திரட்டைப் பதிப்பித்த முறையிலும் உ.வே.சா. தமக்கே உரிய நெறிகளைக் கையாண்டுள்ளார். அவை :

முகவுரை
ஸ்ரீ குமர குருபர சுவாமிகள் சரித்திரச் சுருக்கம்
ஆராய்ச்சி
சிற்றிலக்கியங்கள்
செய்யுள் முதற் குறிப்பகராதி
அரும்பத அகராதி -என்பனவாகும்.

நூலாராய்ச்சி 101 பக்க அளவில் மிக விரிவாக அமைந்துள்ளது.

தமிழ்ப் பெருமை, இலக்கிய, இலக்கணப் பதிவுகள், சிற்றிலக்கியங்களின் வரைவிலக்கணங்கள், உயிரினங்களின் இயல்புகள், பண்பாட்டுக் குறிப்புகள், சமய சித்தாந்தக் கருத்துக்கள், வழக்குச் சொல்லாட்சி எனத் தம் மனத்தைக் கவர்ந்த பல்வேறு இனச் செய்திகளையும் கொண்டுள்ளது. இப்பகுதியில் இடம்பெற்றுள்ள கருத்துக்கள் யாவும் செய்யுட்களின் அடியில் தாம் தந்துள்ள குறிப்புரையின் அடிப்படையில் அமைந்தவை ஆகும்.

## இலக்கிய வளம் பேணுதல்

டாக்டர். உ.வே.சா. தாம் பதிப்பித்துள்ள இப்பிரபந்தத் திரட்டில் பதினான்கு சிற்றிலக்கியங்களைச் சேர்த்துள்ளார். அவை

1. கந்தர் கலிவெண்பா
2. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்
3. மதுரைக் கலம்பகம்
4. நீதிநெறி விளக்கம்
5. திருவாரூர் நான்மணிமாலை
6. முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்
7. சிதம்பர மும்மணிக்கோவை
8. சிதம்பரச் செய்யுட்கோவை
9. பண்டார மும்மணிக்கோவை
10. காசிக் கலம்பகம்
11. சகல கலாவல்லி மாலை
12. மதுரை மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை
13. மதுரை மீனாட்சியம்மை குறம்
14. தில்லைச் சிவகாமியம்மை இரட்டை மணிமாலை

என்பன ஆகும். இவற்றுள் இறுதியிலுள்ள மூன்றும் குமரகுருபரரால் இயற்றப் பெறவில்லை என்பது உ.வே.சா.வின் கருத்து. எனினும் பிற சிலர் இவற்றையும் சேர்த்து அச்சிட்டுள்ளமையால், தாமும் இவற்றைச் சேர்த்திருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை, மீனாட்சியம்மை குறம், சிவகாமியம்மை இரட்டை மணிமாலை என்னும் மூன்று பிரபந்தங்களும் குமர குருபர சுவாமிகள் இயற்றியனவாக அச்சுப்பிரதிகளிற் காணப்படுகின்றன. ஆயினும் திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்திலுள்ள பழமையான எட்டுப் பிரதிகளிலும் வேறு பழைய ஏட்டுப் பிரதிகளிலும்

இம்மூன்றும் காணப்படவில்லை. பரம்பரையாகப் பாடம் சொல்லுபவர்கள் இம்மூன்றையும் குமரகுருபர சுவாமிகள் நூல்களோடு சேர்த்துச் சொல்வதில்லை. என்னுடைய தமிழாசிரியராகிய மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்களும் வேறு பல வித்துவான்களும் இவற்றைக் குமரகுருபரர் வாக்காகக் கருதுவதில்லை. இவற்றின் சொற்பொருளமைதிகளை ஆராய்ந்தாலும் இவற்றிற்கும் முனிவர் இயற்றிய பிரபந்தங்களுக்கும் உள்ள வேறுபாடு தெளிவாகப் புலப்படும். இதற்கு முன் வெளிவந்துள்ள பதிப்புக்களில் இவையும் சேர்க்கப்பட்டுள்ளதை எண்ணி யானும் இவற்றைத் தனியே பின்னால் இப்பதிப்பில் சேர்த்திருக்கிறேன்.

(நூல் முகவுரையில் உ.வே.சா.)

தமிழ் இலக்கியச் செல்வங்களைத் தேடித்தேடி அலைந்த தமிழ்த்தாத்தா இவற்றையும் இணைத்து இலக்கிய வளத்தைப் பெருக்கிக் காத்திடவேண்டும் என்னும் நோக்கிலேயே சேர்த்துள்ளார் என்பது தெரிகிறது.

## இலக்கிய நாகரீகம்

குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத் திரட்டில் உ.வே.சா. எழுதியுள்ள குறிப்புரை பல்வேறு சிறப்புக்களைத் தாங்கி உள்ளது. அவரது நுண்மாண் புலத்தையும் வெவ்வேறு துறைகளைச் சார்ந்த நூலறிவையும் அவை புலப்படுத்துகின்றன. தவிர, கற்பவரைச் சிறந்த புலமையாளராக மாற்ற வல்ல அரிய செய்திகளைத் தொகுத்துக் கூறுவனவாகவும் காணப்படுகின்றன.

ஒரு படைப்பிற்கு எழுதப்படுகிற உரைவிளக்கம் அதனைப் படைத்த ஆக்கியோனின் உள்ளக் கருத்தைத் திரிபின்றி வெளிப்படுத்துவதாக இருத்தல் வேண்டும். அதற்கு முரணாகவோ அரைகுறையாக வெளிப்படுத்துவதாகவோ அமைவது ஆக்கியோனைச் சிதைப்பதாக அமையும். இது படைப்பின் கட்டமைப்பாகிய செய்யுள் வடிவத்திற்கே அன்றி, அதற்குத் தருகிற உரை விளக்கத்திற்கும் ஏற்புடையது. உ.வே.சா. விருப்பு, வெறுப்பு இன்றி புகழ்ச்சி-இகழ்ச்சியைக் கவனத்தில் கொள்ளாது, சமயச் சார்பின்றி, தமிழ் மீது கொண்ட பற்று ஒன்றனையே ஊதியமாக இன்பமாகக் கொண்ட பெருந்தகை. எனவே இந்த இலக்கிய நாகரிகத்தை அவர் முழுமையாகப் பின்பற்றியுள்ளார்.

புராதன தமிழ் நூல்களும் உரைகளும் பண்டை வடிவங் குன்றாதிருத்தல் வேண்டுமென்பதே எனது நோக்கமாதலின், பிரதிகளில் இல்லாதவற்றைச் சுட்டியும் உள்ளவற்றை மாற்றியும் குறைத்தும் மனம் போனவாறு அஞ்சாது பதிப்பித்தேனல்லேன். ஒருவாறு பொருள் கொண்டு பிரதிகளில் இருந்தவாறே பதிப்பித்தேன். யானாகவொன்றுஞ் செய்திலேன் என்று என் சரித்திரத்தில் (பக்கம் 611-612) உ.வே.சா. கூறுவதில் நாகரீகமும் கற்றடங்கிய மேன்மையும் வெளிப்படுகின்றன.

## சுத்தமான பதிப்பு

ஒரு நூலுக்கோ ஓர் ஆசிரியனின் வெவ்வேறு நூல்களுக்கோ உரை எழுதும் போது, ஒரு பாடல் அல்லது ஒரு நூலை மட்டுமே குறியாகக் கொண்டு எழுதுதல் தகாது. அம்முறை துண்டு முறை - உறுப்பு முறை. அது ஆசிரியனின் உள்ளக்கருத்தை வெளிப்படுத்துகிற முறை ஆகாது. நூல் முழுமையினையும் அல்லது ஆசிரியனின் நூல்கள் யாவற்றையும் படித்துத் தெளிந்து, ஒத்துணர்வு கொண்டு எழுதும் போதே உரை விளக்கத்தின் நோக்கம் நிறைவேறும் ஆசிரியனின் கருத்து வெளிப்படும். இதனை உ.வே.சா. சங்க இலக்கியங்களின் பதிப்பைச் சான்றாகக் கொண்டு, விவரிக்கிறார்.

ஒரு நூலைத் திருத்தமாகப் பதிப்பிக்க வேண்டுமென்றால் பல வகையான கருவிகளை முதலில் அமைத்துக்கொள்ளவேண்டும். ஏட்டுச் சுவடிகள் கிடைப்பது மட்டும் போதாது. ஏட்டில் இருப்பது அவ்வளவும் திருத்தமாக இராது. பல காலமாகப் பிழையாகவே வழங்கி வந்த பாடங்களை அவற்றிற் பார்க்கலாம். அவற்றுள் இதுதான் சுத்த பாடம் என்று தெரிந்துகொள்வதற்குப்படும் சிரமந்தான் மிகவும் அதிகம். நூலில் உள்ள கருத்துக்களுக்கும் சொற்களுக்கும் அகராதி எழுதி வைத்துக்கொள்வது மட்டும் போதாது. புறநானூற்றில் பல புலவர்கள் பாடியிருக்கிறார்கள். அப்புலவர்களுடைய பாடல்கள் வேறு நூல்களிலும் இருக்கின்றன. அந்தப்பாடல்களையும் பார்த்தால் அந்தப் புலவர் வாக்கின் போக்கையும் அவருக்கு விருப்பமான கருத்துக்களையும் நடையையும் உணர்ந்து கொள்ளலாம். அந்த ஆராய்ச்சியிலிருந்து சில திருத்தங்கள் கிடைக்கும். ஆகவே சங்கப்புலவர்கள் பெயர்களை வரிசையாக எழுதிக்கொண்டு அவர்கள் இயற்றிய பாடல்கள் எந்த எந்த நூல்களிலுள்ளனவென்று தெரிந்து தொகுத்துப் படித்தேன்.

சங்ககாலத்து நூல்களில் வழங்கிய மரபை அறிவதற்கு அவை அனைத்தையுமே ஆராயவேண்டும். சங்க நூல்களவ்வளவும் சேர்ந்து ஓர் உடம்பு போன்றவை. அவ்வுடம்பு முழுவதும் ஒரு வகையான நாடி ஓடும். ஆகையால் அவற்றை முற்றப் பயின்றால் தான் அந்த மரபு தெளிவாக விளங்கும். இதை உத்தேசித்து என்னிடமுள்ள எல்லாச் சங்கநூல்களுக்கும் அகராதி எழுதி வைத்துக்கொண்டேன்.

புறநானூற்றை ஆராய்ச்சி செய்வதற்குச் சங்கநூல் முழுவதையும் ஆராய்ச்சி செய்வது அவசியமாயிற்று. இதனால் எனக்குப் பன்மடங்கு இன்பம் உண்டானாலும் சிரமமும் பன்மடங்காயிற்று. பலபேருடைய உதவியை நாடவேண்டியது இன்றியமையாததாக இருந்தது.

(என் சரித்திரம், பக்கம் 725)

## குறிப்புரைச் சிறப்பு

உ.வே.சா. இத்தகைய பதிப்புக் கொள்கையினையே குமரகுருபரர் பிரபந்தத் திரட்டிலும் தழுவியுள்ளார். அவரது குறிப்புரை உறுப்பு முறையில் அன்றி, முழுஉடம்பு முறையில் எழுதப்பட்டுள்ளது. சான்றாக, கந்தர்கலி வெண்பாவிலும் சிதம்பர மும்மணிக் கோவையிலும் ஒரு பகுதிக்கு எழுதப் பெற்றுள்ள உரையைக் காணலாம். கந்தர் கலிவெண்பாவின் பதினைந்தாம் கண்ணியில்,

ஈரிரண்டு தோற்றத் தெழுபிறப்புள் யோனியெண்பான்
ஆரவந்த நான்குநூ றாயிரத்துள்

என்ற பகுதிக்கு விளக்கமாக சிதம்பர மும்மணிக் கோவை பதினான்காம் பாடலில்,

முட்டையிற் கருவில் வித்தினில் வெயர்ப்பில்
நிற்பன நெளிவ தத்துவ தவழ்வ
நடப்பன கிடப்பன பறப்பன வாகக்
கண்ணகன் ஞாலத் தெண்ணில்பல் கோடிப்
பிள்ளைகள் பெற்ற பெருமனைக் கிழத்திக்கு
நெல்லிரு நாழி நிறையக் கொடுத்தாங்(கு)

என்றும் கூறுகிறார்.

கந்தர் கலிவெண்பா பகுதிக்கு உ.வே.சா. பின்வருமாறு உரைக்குறிப்பு எழுதியுள்ளார்.

ஈரிண்டு தோற்றம்-நான்கு வகையான பிறப்பு, முட்டையிற் பிறப்பனவாகிய அண்டசம், வேர்வையிற் பிறப்பனவாகிய சுவேதசம், வித்திற் பிறப்பனவாகிய உற்பீசம், கருவிற் பிறப்பனவாகிய சராயுசமென்பன. எழு பிறப்பு நிற்பன, நெளிவன, தத்துவன, தவழ்வன, நடப்பன, கிடப்பன, பறப்பன என்பனவாம் (463). யோணி யெண்பான் ஆரவந்த நான்கு நூறாயிரம்-எண்பத்து நான்கு லட்சம் யோணி பேதங்கள் "உரைசேரு மெண்பத்து நான்கு நூறாயிரமாம் யோணி பேதம்" (திரு.ஞா.தே) "ஊர்வ பதினொன்றா மொன்பது மானிடம், நீர் பறவை நாற்காலோர் பப்பத்தாம்-சீரிய, பந்தமாந் தேவர் பதினா லயன்படைத்த, அந்தமில்சீர்த்தாவரநா லைந்து" என்ற பழஞ்செய்யுள் எழுவகைப் பிறப்பின் வகையையும் தொகையையும் தெரிவித்தல் காண்க.

சிதம்பர மும்மணிக் கோவையில்,
முட்டையிற் பிறப்பன அண்டசமென்றும்,
கருவிற் பிறப்பன சராயுசமென்றும், வித்திற்
பிறப்பன உற்பீசமென்றும், வேர்வை
யிற் பிறப்பன சுவேதசமென்றும் கூறப்
படும் கந்தர் கலிவெண்பா, 15-ஆம் கண்
ணியின் குறிப்புரையைப் பார்க்க.

என்று எழுதுகிறார்.

உ.வே.சா. குறிப்புரை எழுதும் போது நூலாசிரியரின் பிற நூல்களை மட்டுமின்றி, ஏனையோர் எழுதியுள்ள பழைய நூல்களிலிருந்தும் மேற்கோள் காட்டுகிறார். இந்த நெறி தமது கருத்தை நிலைநாட்டுவதோடு, பல நூல்களை கற்போருக்கு அறிமுகம் செய்வதாகவும் அமைகிறது. ஏறக்குறைய நூறு நூல்களிலிருந்து எடுக்கப்பட்டுள்ள மேற்கோள்களை இப்பிரபந்தத் திரட்டில் காணமுடிகிறது.

குறிப்புரை சொல் அல்லது தொடருக்கான பொருள் கூறுதலாக மட்டுமன்றி, தெளிவான விளக்கங்களை அளிப்பதாகவும் அமைந்துள்ளது. இவ்விளக்கம் சைவ சித்தாந்தக் கருத்து, புராண நிகழ்ச்சி, வரலாற்றுச் செய்தி, பண்பாட்டு வழக்கு என்பன போன்ற நிலைகளில் காணப்படுகின்றது.

**சைவசித்தாந்தம்**

பஞ்சவிதருபம்-பிரமன், விஷ்ணு, உருத்திரன்
மகேசுரன், சதாசிவம் என்னும் ஐவருருவம்
ஊழ்வினை - இங்கே சஞ்சிதம்
உடல் அறுபத்தெட்டும் - தூல தேகக் கருவிகள்
அறுபதும் சூக்கும தேகக் கருவிகள் எட்டும்
கன்ம மலத்தார் - பிரளயாகலர்
ஒரு மலத்தார்-விஞ்ஞானாகலர்

(கந்தர் கலிவெண்பா)

தனிமுதல் யாமென்பார் - சிவபிரான்
அம்மனை-தாய். சத்தி தத்துவத்தினின்றும்
சதாசிவ தத்துவம் தோன்றுதலின் அம்பி -
கையைச் சிவபிரானுக்குத் தாயாகக் கூறினார்.

**புராணம்**

மாமடிகள் இடு சாவமும். மாமடிகள் - மாமனார்
தக்கன் இடு சாபம் சந்திரன் உரோகிணியிடத்து

மிக்க விருப்புடையவனாகியிருந்து மற்ற மனைவி
யிரைப் புறக்கணித்தமையின், கலை குறைகவென்று
தக்கன் சாபமிட்டானென்பது வரலாறு

(கந்தசந்திரசாபம்)

**வரலாற்றுச் செய்தி**

பைந்தமிழ்ப் பின் சென்ற கொண்டல் - திருவெஃகாவிற்
கோயில் கொண்டெழுந்தருளிய பெருமாள், "கணி-
கண்ணன் போகின்றான்" என்ற திருமழிசை யாழ்வார்
செய்யுளைக் கேட்டுத் தம்முடைய பாயலைச்
சுருட்டிக் கொண்டு அவருடன் சென்றனரென்ப
தொரு வரலாறு: இதன் விரிவைத் திருமழிசை
யாழ்வார் சரித்திரத்தால் உணரலாகும்

(மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் 1)

### பண்பாட்டு வழக்கு

தம் பாவையர்க் கன்று காதோலை பாலித்த
காதோலை மாங்கலியம் போன்ற சிறப்பு
டையது; அதனைப் பாலித்தலாவது அவர்களுடைய
மங்கலம் கெடாமல் நிலவும்படி நிறுத்துதல்

(மதுரைக் கலம்பம், 29)

புல்வாயின்பார்வை - மானாகிய பார்வை மிருகம்;
விலங்குகளைப் பிடித்தற்குக் குறவர்களால் உயிரோடு
வளர்த்துப் பழக்கப்படும் மிருகம், இது தீபகமென
வும் வழங்கப்படும்.

(மதுரை மீனாட்சியம்மை குறம், 19)

### அணிநயம் காட்டல்

பாடல்களில் இடம் பெற்றுள்ள நயத்தைச் சுட்டிக்காட்டும் நோக்கில் உ.வே.சா. தற்குறிப்பேற்றம், எடுத்துக்காட்டுவமை, திரிபதிசயம், ஒட்டணி போன்ற அணிகளையும் சுட்டி, விளக்குகிறார். அவற்றுள் பண்டார மும்மணிக் கோவையில் (24),

ஊரிற் குறுகினே னோர்மாத் திரையளவென்
பேரிற் குறுகினேன் பின்

என்னும் அடிகளில் மாத்திரைச் சுருக்கமென்னும் அணி அமைந்துள்ளது என்னும் விளக்கம் குறிக்கத்தக்கது.

என்பேரென்றது சீவனேன்பதை அஃது ஒரு
மாத்திரை குறைந்ததாவது, சீவன் என்பது,
சிவமானேனேன்றபடி, மலமறுத்துச் சிவ
மாக்கி யருளினாரென்று கொள்க.

### சொல்லாராய்ச்சி

குறிப்புரையில் இடம் பெற்றுள்ள செய்திகளுள் சொல்லாராய்ச்சி உ.வே.சா.வின் ஒப்பீட்டு மொழியியல் புலமைக்குச் சான்றாகத் திகழ்கிறது. நீதிநெறிவிளக்கத்தில் (2) வருகிற பீழை என்னும் சொல்லைப் பீடை என்னும் வடசொல்லின் திரிபு எனக் கூறுகிறார்.

பீழை-துன்பம். பீடையென்னும் வடமொழிச் சிதைவு; நாடிகா வென்றது நாழிகையென்று வந்தாற்போல.

கந்தர் கலிவெண்பாவில் வருகிற `கிடாய்' என்னும் சொல்லுக்கு `ஆட்டுக்கிடாய்' என்று பொருள் உரைக்கிற உ.வே.சா. "நிலைக்கோட்டு வெள்ளை நால் செவிக் கிடாய்" என்னும் அகநானூற்று (156:14) அடியை மேற்கோள் காட்டுகிறார். `கடா' என்று வழங்குதலும் உள்ளமையால், `கிடாய்' என்பதே முதல் வடிவம் என்ற தன் கொள்கையை நிலைநிறுத்தும் முயற்சி இது எனலாம்.

உ.வே.சா. சந்தப்பாடல்களில் அவற்றிற்கேற்ற சந்தக் குழிப்புக்களையும் குறிப்பிட்டுள்ளார். மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழில் புதிய நெறி ஒன்றும் இடம் பெற்றுள்ளது. சில பாடல்களில் அவற்றின் கருத்தைச் சுருக்கி குறிப்புரையை அடுத்து எழுதியுள்ளார். இது யாப்பிற்கு ஏற்ப இடம் மாறிக் கிடக்கிற நீண்ட பாடல்களின் கருத்தை எளிதில் புரிதற்கு உதவுகிறது.

## பழைய உரைகளில் குறை

பழைய உரையாசிரியர்களின் புலமைத் திறத்தையும் அவர்களது இலக்கியப் பணியையும் பெரிதும் மதிப்பவர் உ.வே.சா. எனினும், அவ்வுரையாசிரியர்களின் உரை எழுதும் முறையில் இடம் பெற்றுள்ள சில குறைகள் அவரைப் பெரிதும் வருத்தின.

நச்சினார்க்கினியர் உரையினால் புதிய புதிய விஷயங்களை உணர்ந்தேன். இரண்டு விஷயங்களில் அவரிடம் சிறிது வருத்தம் உண்டாயிற்று. பல இடங்களில் மாறிக் கூட்டிப் பொருள் விளக்குகிறார். ஓரிடத்திலுள்ள பாட்டிலிருக்கும் சொல்லைப் பல பாட்டுக்கு முன்னே மற்றோரிடத்திலுள்ளதோடு இணைத்து மாட்டெறிகின்றார். அத்தகைய இடங்களில் அவர் உரையில் சிறிது வெறுப்புத் தட்டியது. ஒரு விஷயத்துக்கோ சொற்பிரயோகத்துக்கோ ஒரு நூற் செய்யுட்பகுதியை மேற்கோள் காட்டுமிடத்தில் அந்த நூற்பெயரைச் சொல்வதில்லை என்றார் பிறரும் என்று எழுதிவிட்டு விடுகிறார். (என் சரித்திரம் பக்கம் 541)

முந்தைய உரையாசிரியர்களிடம் காணப்பட்ட இத்தகைய குறைகள் நேரா வண்ணம் உ.வே.சா.மிகக் கவனமாகத் தம் பதிப்புப் பணியையும் குறிப்புரை, ஆய்வுரைகளையும் செய்துள்ளார்.

உ.வே.சா. கற்ற தமிழ் நூல்களின் பட்டியலைப் போன்று அவர் பழகிய சான்றோர்களின் பட்டியலும் நீளமானது. அவர்களுள் நேருக்கு நேர் உரையாடி மகிழ்ந்தோர் உண்டு. மடல் வழியே நட்புக் கொண்டோரும் உண்டு. நூல்களைக் கொடுத்து உதவியோர் சிலர். நூல்களைப் பதிப்பித்தற்குப் பண உதவி செய்தோர் சிலர்.

மாமன்னர் பாஸ்கர சேதுபதி நான்காம் தமிழ்ச்சங்கம் நிறுவித் தமிழாய்ந்த பாண்டித்துரைத் தேவர் அவர்களையும் உ.வே.சா. தம் 'என் சரித்திரத்தில்' விரிவாகக் குறிப்பிடுகிறார். 1892 ஆம் ஆண்டைய நவராத்திரி விழாவின் போது தம்மை அழைத்துச் சேதுபதியார் சிறப்புச் செய்ததைக் கூறுகிறார். ரூ. 100 பணத்தையும் ரூ. 300 மதிப்புள்ள சால்வையையும் வழங்கி மன்னர் பெருமைப்படுத்தியதை இனிதாக நினைவு கூர்கிறார். சந்தித்தபோதெல்லாம் நூல்களைப் பதிப்பதற்குப் பணஉதவி செய்வதாகக் கூறி, ஊக்கப்படுத்தியதைக் குறிப்பிடுகிறார்.

உ.சே.சா.வின் பதிப்புப் பணிக்குப் பெரிதும் உதவியவர்களுள் பாண்டித்துரைத் தேவர் குறிப்பிடத்தக்கவர். கந்தர் கலிவெண்பாவை அச்சிடுதற்கு வழங்கினார். உ.சே.சா. பதிப்பித்த நூல்களை வாங்கி, மேலும் புதிய பதிப்புக்கள் வெளிவருவதற்கு ஊக்கமளித்தார். மணிமேகலை அச்சிடும் நோக்கத்தினை உ.வே.சா. தெரிவித்தபோது அவருக்கு ரூ. 500 க்கான காசோலையை அனுப்பி உதவினார். அக்காசோலையுடன் இணைத்திருந்த கவிதை மடல் உ.வே.சா. விடம் தேவர் கொண்டிருந்த நன்மதிப்பையும் தமிழ்ப்பற்றையும் தெரிவிக்கிறது. அதில் ஒரு பகுதி.

பயன்சிறிய தேனும் பனையளவாக் கொள்வர்
நயன்றெரிவோ ரென்றவுண்மை நாடி—முயன்றிதுபோ
தைந்நூறு ரூபா வனுப்பினன.: தேற்றருள் வாய்
மெய்ந்நூ றுரீஇ யோமுகும் வித்தகா

உ.வே.சா. வேணுவனலிங்க விலாசச் சிறப்பு (1878) முதலாக என் சரித்திரம் ஈறாக 97 நூல்களைப் பதிப்பித்துள்ளார். அவை சிற்றிலக்கியம், காப்பியம், பழந்தமிழ் இலக்கியம், வரலாறு, தன் வரலாறு கட்டுரை எனப் பல திறத்தவை. இவற்றுள் பல செந்தமிழ், கலைமகள், சிவநேசன், ஆனந்தவிகடன் இதழ்களில் வெளியானவை.

## தமிழ்க்கோயில் உ.வே.சா.

உ.வே.சா. வின் ஈடு இணையற்ற அரும்பணி புதைந்து மக்கி அழிய இருந்த தமிழ்ச்செல்வங்களை மீட்டுத்தந்தது. தமிழ்மொழி தன்னேரில்லாத செம்மொழி என்னும் பெருமையை உலகம் அறிய அடித்தளமானது. சென்னை அரசு (1906) மகாமகோபாத்தியாயர் என்ற பட்டத்தை அளித்தது. பாரத தர்ம மண்டலம் (1917) என்ற அமைப்பு 'திராவிட வித்தியா பூஷணம்' என்ற சிறப்பினை வழங்கியது. காஞ்சிச்சங்கராச்சாரியார் சார்பாக மதுரைத் தமிழ்ச்சங்கம் (1925) 'தாக்ஷிணாத்திய கலாநிதி' என்ற பட்டத்தையும் சென்னைப் பல்கலைக்கழகம் (1932) 'டாக்டர்' பட்டத்தினையும் வழங்கிப் பாராட்டி, பெரும்பேறு பெற்றன.

> சாமிநாத ஐயர் தமிழிலே பிறந்தார்; தமிழிலே வளர்ந்தார்; தமிழிலே வாழ்ந்தார்; அவர் பிறப்பும் தமிழ்; வளர்ப்பும் தமிழ்; வாழ்வும் தமிழ்; அவர் தமிழாயினார்; தமிழ் அவராயிற்று; அவர் தமிழ்; தமிழ் அவர்;
>
> ஐயரின் இளமைக் காலமும் இடைக்காலமும் சோதனைக்குரியன; அவர் சோதனை வலையில் சிக்கினார் இல்லை. அஃது அவரது தவப்பயன். அக்காலம் சண்டை மயமானது. ஐயர் புலமை அவரைச் சண்டையில் புகுத்தவில்லை; தமிழ்த்தொண்டில் புகுத்தியது; அத்தொண்டு அவரை மஹாமஹோபாத்தியாயர் ஆக்கிற்று; தாக்ஷிணாத்திய கலாநிதி ஆக்கிற்று; டாக்டர் ஆக்கிற்று; தமிழ்த்தாத்தா ஆக்கிற்று; தமிழ்க்கோயில் ஆக்கிற்று.
>
> (திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புகள்)

# சிலம்பில் இயற்கை

பேராசிரியர். முனைவர் கதிர்.மகாதேவன்

"கவிதை என்பது இயற்கையின் படிதான் என்று பிளேட்டோ கூறினார். அவருடைய கருத்தை மறுத்தார் அரிஸ்டாடில்" .............

"கவிதை என்பது இயற்கையின் மறுபடி அன்று; இயற்கையின் பொருண்மையை ஊடுருவி உணர்ந்து கொடுப்பதே கவிதை" என்று விளக்கினார் அரிஸ்டாடில்" -(Principles of Literary Criticism p. 134)"

இயற்கை நல்கும் இனிய காட்சிகளை இளங்கோவடிகள் தம் காப்பியத்துள் திறம்படப் புனைந்துள்ளார். இயற்கைப் புனைவில், அவர் கையாண்ட உத்திகள், இயற்கையின் பொருண்மையை ஊடுருவி உணர்ந்து கொடுப்பதாய் உள்ளன.

"மலை, கடல், நாடு, வளநகர், பருவம், இருசுடர்த் தோற்றம் இனையன புனைந்து" என்று தண்டியலங்கார ஆசிரியர், இயற்கைப் புனைவைக் காப்பிய இலக்கணமாக்கிப் பறைசாற்றுவர், இந்நெறியில் காப்பிய இயற்கை வருணனையை யாத்த புலவர் பலர் உளர். ஆயின், இளங்கோவடிகள் இவ்வழியில் இயற்கையை மிகைபடப் புனைந்தாரில்லை.

சங்க இலக்கிய இயற்கைப் புனைவிலே ஈடுபட்டுத் தேரிய, கூரிய, சீரிய நோக்குடைய அடிகளார், சிலம்பில் காப்பிய அமைப்போடும், கதை அமைப்போடும் இயற்கைப் புனைவினை இரண்டறக் கலக்குமாறு செய்துள்ளார். இவ்வுத்தியே காப்பியத்தின் உயர்ச்சிக்கு வழி வகுக்கிறது எனலாம்.

சட்டகம் இன்றி உருவம் இல்லை. ஆயின், சட்டகம் (Skeleton) அடிப்படையே அன்றி வடிவமாகாது. காப்பியத்தில் கதைச் சுருக்கம் என்பது - நிகழ்ச்சிகளைச் சொல்வது என்பது - எலும்புக்கூடு போலத் தலை, குருதி, நரம்பு, உயிர்........ போலக் கதைக் கட்டு, நடை, மெய்ப்பாடு, கற்பனைகள் அமைந்தால்தான் உருவம் / வடிவம் நிறைவுறும். தமிழில் உருவம், வடிவம் என்னும் சொற்கள் அழகு எனவும் பொருள்படுவது நினைவுகூறத் தக்கது.

கற்பனை எனும் கூறு நிறைவுபெறக் கலைஞன் கையாளும் உத்திகளில் இயற்கை வருணனையும் ஒன்றாகும். வருணனை பல திறப்படும். வெற்று வருணனை ஒன்று. அது பயனற்றது.! **காப்பிய நிகழ்ச்சிகளில் ஊடாடும் மாந்தரின் உணர்ச்சி மெய்ப்பாடுகளை**

உள்ளூறுத்தி அமைவது மற்றொன்று; சிறந்த கலைஞர்களிடம் இத்தகைய வருணனைகள் இருக்கும் காப்பியக் கதை மாந்தரின் உணர்ச்சிக்கு ஏற்ப வருணனை வகுப்பதிலேயே சிலேடை முதலியன அமைத்து இயற்றுவது கவிதை வல்லாளர் திறமாகும். இளங்கோவடிகளிடம் இத்திறம் உண்டென்பதை, 'அந்திமாலைச் சிறப்புச் செய் காதை' நிலை நாட்டுகிறது.

அந்திமாலையின் இயற்கையை வருணித்த காரணமும் முறையும், அடிகளார் இயற்கைப் புனைவை உணரவும், உணர்த்தவும் கொள்ளும் ஒரு காட்டாகக் கொள்ளலாம்.

மாதவி பொருட்பெண்டும் அல்லள்; கண்ணகி பாசப் பசையற்றவளும் அல்லள். இந்த இரு கருத்துக்களையும் ஒரே காட்சியில் புலப்படுத்த வேண்டும். இதற்கு இயற்கைக் காட்சி வருணனை உதவவேண்டும். இத்தரத்தில், "அந்தி மாலைச் சிறப்புச் செய் காதை" திறமுடையதாய் அமைவதை, அக்காதையின் இறுதி வெண்பாச் சுரிதகமாய்ச் சுட்டும்.

"கூடினார்பால் நிழல்ஆய், கூடார்பால் வெய்யதுஆய்
காவலன் வெண்குடை போல் காட்டிற்றே - கூடிய
மாதவிக்கும் கண்ணகிக்கும், வான்ஊர் மதிவிரிந்து
போது அவிழ்க்கும் கங்குல் பொழுது"

கூடினார்பால் நிழலாய்க் கூடார்பால் வெய்யதாய் அமையும் இயல்புடைய கங்குற்பொழுது, இவ்விருமைக் குறிப்புக்கும் பொருத்தமானது. "கலவியும் புலவியும் காதலற் களித்து ஆங்கு ஆர்வ நெஞ்சமொடு கோவலற்கு எதிரி"....... என்ற பகுதி மாதவியின் காதல் நிலையினைப் புலப்படுத்துகிறது. பொருட் பெண்டிரின் பொய்மை முயக்கினின்றும் வேறுபடுத்திக்காட்டுவன இவ்வரிகள். தவம் எனும் பொறுமை நிலைக்கு முந்தியதாகக் கண்ணகியின் நிலை இங்கே குறிக்கப்படுவதாகக் கொள்ளலாம். இங்கு இயற்கை வருணனையோடு கண்ணகி வருந்திய நிலையையும், வாடிய நிலையையும், மாலைக்கால வருணனையோடு இணைத்தும் இன்பந் தவிர்ந்த நிலையோடு பிணைத்தும் அடிகள் புலப்படுத்தியுள்ளார்.

அடிகள் அரச குலத்தவர்; அந்திமாலை இயற்கைப் புனைவு, ஆட்சிப் பின்னணியில் அமைந்து காணப்படுவது அறிந்து இன்புறத்தக்கது.

"விரிகதிர் பரப்பி, உலகம்முழுது ஆண்ட
ஒருதனித் திகிரி உரவோன் காணேன்;
அம்கண் வானத்து அணிநிலா விரிக்கும்
திங்கள்அம் செல்வன் யாண்டுஉளன் கொல்?என,
திசைமுகம் பசந்து, செம்மலர்க் கண்கள்
முழுநீர் வார, முழுமையும் பனித்துத்
திரைநீர் ஆடை இருநில மடந்தை
அரைசு கெடுத்து, அலம்வரும் அல்லல்காலை -
கறைகெழு குடிகள் கைதலை வைப்ப" (சிலம்பு . 4 : 1-9)

செங்கோல் இழந்த நிலையை இங்குச் சொல்லும் அடிகள், புறஞ்சேரி இறுத்த காதையில் (15) கொடுங்கோலன் வீழ்ச்சியை எதிர்நோக்குவதைச் சொல்வார்.

"கொடுங்கோல் வேந்தன் குடிகள் போல,
படும்கதிர் அமையம் பார்த்திருந் தோர்க்கு
பல்மீன் தானையொடு பால்கதிர் பரப்பித்
தென்னவன் குலமுதல் செல்வன் தோன்றி"
(சிலம்பு . 13 : 15-18)

இங்கு மதியின் தோற்றம், ஞாயிறு மறைவு ஆகிய ஒரே படிமம் இருவகையில் பயன்படுவது குறிக்கற்பாலது. புறஞ்சேரி இறுத்த காதையில், தென்னவன் குலமுதலாகிய திங்கள் தோற்றம் பன்மீன் நடுவண் பான்மதி எனவும், அதே படிமக் காட்சி முன்னர் அந்தி மாலைச் சிறப்புச் செய் காதையில்,

"மல்லல் மூதூர் மாலைவந்து இறுத்தென -
இளையர் ஆயினும் பகை அரசு கடியும்
செருமாண் தென்னர் குலமுதல் ஆகலின்
அந்தி வானத்து, வெண் பிறைதோன்றி" (சிலம்பு . 4 : 20-23)

என்று புனையப்படுவதைக் காணலாம்.

சங்க இலக்கியத்திலிருந்து சிலம்பில் இயற்கை வருணனை வேறுபட்டாலும், பழந்தமிழ் மரபிலிருந்து மாறுபடவில்லை. ஐந்திணை வருணனையைச் சிலம்பின் கதை ஓட்டத்தோடு இணைத்தும் பிணைத்தும் பாடியுள்ள உறுதி அறிந்து மகிழ்வதற்குரியது. பின்வரும் இடங்கள், ஐந்திணை இயற்கைப் புனைவிற்கு உறைவிடமாய் உள்ளன.

இந்திரன் - மருதம் - இந்திர விழா
வருணன் - நெய்தல் - கானல் வரி
கொற்றவை - பாலை - வேட்டுவ வரி
திருமால் - முல்லை - ஆய்ச்சியர் குரவை
முருகன் - குறிஞ்சி - குன்றக் குரவை

வருணனைக்காக வருணனை என்று இல்லாமல், காப்பியக் கதை ஒட்டத்தை இவ் இயற்கை வருணனை நிறைவு செய்வதை உய்த்துணரலாம்.

இளங்கோவடிகளுக்கு மண்ணுலக இயற்கையைவிட, விண்ணுலக இயற்கை நாட்டம் காப்பிய ஒட்டத்தில் அதிகமாக உள்ளதைக் காணலாம். சிலம்பில் காணப்படும் இயற்கையைக் காட்டும் உருக் காட்சிகள் (Imagery) இதனை மெய்ப்பிக்கும்.

கதைப் போக்கில் இயற்கைப் புனைவு பெறும் இடம் சிறப்பாக உள்ளது. அதற்குக் காட்டாகத் "தென்றல்" வருணனையைக் காணலாம். கதையில் முதல் தென்றல் மனையறம் படுத்த காதையில் வீசும், "மண்வாய்த் தென்றல்" ஆகும் அது கோவலனும் கண்ணகியும் "தாரும் மாலையும் மயங்கி-கதிர் ஒருங்கு இருந்த" காட்சியை அவ்வறையில் கண்டது! இரண்டாம் தென்றல் "அந்தி மாலைச் சிறப்புச் செய் காதை"யில் "சிறுகால் செல்வனாக" வருகிறகாட்சியைக் காணலாம். இங்கு "நிலவுப் பயன்கொள்ளும் நெடுநிலா முற்றத்துக் கோவலனும் மாதவியும் களிப்புற்ற" காட்சியை இத்தென்றல் கண்டது நமக்கும் காட்டுகிறது.

புகுந்த இடத்தின் மணத்தைப் பெறும் தென்றலை இந்திர விழவு ஊர் எடுத்த காதையில் காணலாம். இத்தென்றல் கோவலனுக்கு உவமை ஆகின்றது. இதனை,

"குரல்வாய்ப் பாணரொடு நகரப் பரத்தரொடு
திரிதரு மரபின் கோவலன் போல
இளிவாய் வண்டினொடு, இன்இள வேனிலொடு
மலய மாருதம் திரிதரு மறுகில்" (சிலம்பு . 5 : 200 -203)

என்பர் இளங்கோவடிகள். அடுத்து, "நாடுகாண் காதை" யில் புகார் நகரின் வாயிலைக் கடந்து கோவலன், கண்ணகி, கவுந்தி ஆகியோர் போகும்போது, "கலையிலாளன் காமர் வேனிலொடு மலய மாருதம்" வருகிறபுனைவைக் காணலாம். தொடர்ந்து, புறஞ்சேரி இறுத்த காதையில், "மலயத்து ஒங்கி, மதுரையில் வளர்ந்து புலவர் நாவில்" பொருந்திய தென்றலைச்

சந்திக்கிறோம். மதுரைத் தென்றலைப் பற்றி,

"............ ............ ............ .......... ............

**அம்தீம் புகையும் ஆகுதிப் புகையும்**
**பல்வேறு பூம்புகை அளைஇ வெல்போர்**
**விளங்குபூண் மார்பின் பாண்டியன் கோயிலின்**
**அளந்து உணர்வுஅறிய ஆர்உயிர் பிணிக்கும்**
**கலவைக் கூட்டம் காண்வரத் தோன்றிப்**
**புலவர் செந்நாப் பொருந்திய நிவப்பின்**
**பொதியில் தென்றல் போலாது ஈங்கு**
**மதுரைத் தென்றல் வந்தது; காணீர்"** (சிலம்பு . 13 : 125-132)

என்று கூறுவதின் மூலம் பொதியத் தென்றலுக்கும் மதுரைத் தென்றலுக்கும் வேறுபாடு உண்டு என்று கூறும் புனைவு நயம் அறிதற்குரியது.

எட்டு வரிகள் அடங்கிய மாதவியின் முதற் கடிதத்தில், ஆறுவரிகள் இயற்கைக்கும் மனிதனுக்கும் உள்ள காதல் உணர்வின் ( ....... The marriage of man with nature ) ஒட்டையும் உறவையும் காட்டும் இங்ஙனம் இளங்கோவடிகள் கதை ஒட்டத்தில், நிகழ்ச்சிகளில் இயற்கைப் புனைவை இரண்டறக் கலந்து காட்டுவது அவரது தனிச் சிறப்பு எனலாம்.

தாழ்ந்த நிலமாகிய நெய்தல் நிலத்தில் பிற்ந்த கண்ணகி படிப்படியாகக் கதைப் போக்கில், ஒவ்வொரு நிலமாக அழைத்துச் செல்லப் பட்டு, இறுதியாக மிக உயர்ந்த நிலமாகிய குறிஞ்சி நிலத்திற்கு அழைத்துச் செல்லப்படுகிறாள். சாதாரண வணிகர் குடியிலே பிறந்த கண்ணகி, பத்தினிக் கடவுள் என்று உயர்நிலை பெறும் இயற்கை, இயற்கைப் பின்னணியில் எவ்வளவு அழகாகப் புனையப்பட்டிருக்கிறது. இயற்கை அழகு ஒட்டத்தில் **கண்ணகியின் கதை மண்ணிலே தொடங்கி விண்ணிலே முடிகிறது.**

பேராசிரியர் (மேஜர்) கதிர் மகாதேவன், எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.,
முன்னைத் துணைவேந்தர்
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
முன்னை ஆய்வுப் பேராசிரியப் பெருந்தகை
பல்கலைக்கழக மானியக் குழு, புதுதில்லி

பதிப்பாசிரியர்

பேராசிரியர். இரா. சதாசிவம்

## ஆசிரியர் குழு


பேரறிஞர். நா. பாலுசாமி

பேரறிஞர். தமிழண்ணல்

பேரறிஞர். செ.கந்தசாமி

டாக்டர்.ந.சேதுராமன்

பேரறிஞர். ம.ரா.போ. குருசாமி

பேரறிஞர். கதிர். மகாதேவன்

பேரறிஞர். அ.அ. மணவாளன்

பெரும் புலவர். இரா. இளங்குமரன்

பேரறிஞர். அ. தட்சிணாமூர்த்தி

பேரறிஞர். இ.கி. இராமசாமி

திரு. சே. அரிராமநாதன்

திரு.வே. திருவரங்கராசன்

திரு. ந. வாசுகிராசா



பதிப்பாசிரியர், இரா.சதாசிவம், 2/404, மருதுபாண்டியர் தெரு, வட்டாட்சியர் நகர், மதுரை-20. ✆ 2532879.

ஆசை அச்சகம், மதுரை. ✆ 26 222 50, 98434-32484